உ

அருள் ஒளி



தவத்திரு யோகசுவாமிகளின்
50வது குருபூசை சிறப்புமலர்

பங்குனி

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

94

தெல்லிப்பழை, இலங்கை

2014

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனால்
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.

– நற்சிந்தனை



நல்லூர் தேரடியில் செல்லப்பா சுவாமிகளின்
ஞானமழையில் நனைந்தவர் யோக சுவாமிகள்

அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சீவபாலன் அவர்கள்

பங்குனி மாத மலர்
2014

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

யோக சுவாமிகளின் திருவடி போற்றுவோம்

மானிடத்தைக் காப்பதற்கு மனித வடிவில் இறைவன் வருவதுண்டு. அஞ்ஞானம் தன்னை அகல்விப்பதற்கு மெய்ஞ்ஞான ஒளி தோன்றுவதுண்டு. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நடமாடும் தெய்வமாக எம்மண்ணில் விளங்கியவர் தவத்திரு யோகர் சுவாமிகள் என்றால் மிகையாகாது. எவ்வித ஆரவாரமும் இன்றி சித்தராக, யோகியாக, ஞானியாக இத்தெய்வம் வலம் வந்துள்ளது. தன்னை நாடி வந்தவர்களை மட்டுமல்ல, தேடிச் சிலரிடம் சென்று அவர்களைப் புனிதப்படுத்திய தெய்வப்பிறவி. தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் பரிச தீட்சை பெற்று பலபேரை ஆற்றுப்படுத்தினார்.

மாவிட்டபுரத்தில் பிறந்து கொழும்புத்துறையில் குடிசையில் கொலுவிருந்து, காட்சிக்கு எளியனாக இருந்து வீதிகளிலும், கோயில் சுற்றாடலிலும், சுடலையிலும் பாழடைந்த கட்டிடங்களிலும் தியானத்தில் இருந்து தெய்வீக ஒளியைப் பரப்பினார். காவி, கமண்டலம், பீடம், பாராட்டுவிழா எதுவும் இல்லாத பற்று அற்ற இப்பரமஞானியை யாரறிவார்? கற்றவரானாலும், பொருள்வளம் நிறைந்தவர் ஆனாலும், தோள் வளம் மிக்கவரானாலும் யோக சுவாமிகள் முன் தோற்றுப் போய்விடுவார்.

தன் முன்னால் வருபவர்களின் இம்மை மறுமையை நன்குணர்ந்து அவர்களை வழிப்படுத்தினர். சில சமயம் சுவாமிகள் ஏசிக்கலைப்பதும், அடிக்க கையோங்குவதும் தன்னை நாடி வந்தவர்களை பக்குவப்படுத்துவதற்கே என்பதைப் பலரும் உணர்ந்தனர்.

"சும்மா இரு"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாம் அறியோம்"
"முழுவதும் உண்மை"
"ஒரு பொல்லாப்பும் இல்லை",

போன்ற மகா வாக்கியங்களை செல்லப்பர் உபதேசித்ததன் பயனை சுவாமிகள் பிரகாசிக்கச் செய்தார். யோகர் சுவாமிகளின் அருட்பிரவாகம் இன்று அகிலம் முழுவதும் பேசப்படுகிறது.

அவரது அருள்ஞான ஒளி பெற்றவர்கள் பலர் ஒளி பெற்று வாழ்கிறார்கள். மொழி, மதம், இனம் கடந்து சுவாமிகளின் சீடபரம்பரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. சுவாமிகளின் நாமத்தால் பல தேசங்களிலும் பல பஜனைகளும் பிரார்த்தனைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அமெரிக்கா ஹவாய் தீவில் சைவ சமயம், சுவாமிகளின் பெயரால் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சுவாமிகளின் 50வது குருபூசையை முன்னிட்டு உலகெங்கும் பல்வேறு விழாக்கள் தொடர்ந்து நடைபெறுவது பெருமை தருகிறது. சிவதொண்டன் நிலையம் சுவாமிகளின் நாமத்தால் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் ஆற்றும் பணி போற்றுதலுக்குரியது. கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் ஆச்சிரமம் புனிதமாகப் பேணப்பட்டு வருகிறது. இவை யாவும் திருவருளே. சுவாமிகளின் தெய்வீக நிழல் ஏதோ ஒரு வடிவில் எதிர்கால சந்ததியைக் காக்க வேண்டும். அத்திருவருளை நினைந்து அனைவரும் பிரார்த்திப்போமாக.

- ஆசிரியர்

யோகசுவாமிகள் திருவருட் குறிப்பு

அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மாவுக்கும் மே 29, 1872இல் (தமிழ் நாட்காட்டியில் ஆங்கீரச ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை காலை அவிட்ட நட்சத்திரக் கடைக்கூறு நாலாம் பாதத்தில்) யாழ்ப்பாணம், மாவிட்ட புரத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த யோகசுவாமிகளின் இயற் பெயர் சதாசிவம். இவர் 10 வயதாகும் முன்னரே தாய் இறந்துவிட தாயாரின் சகோதரி முத்துப்பிள்ளை அம்மையார் இவரை வளர்த்து வந்தார். சிறு வயதிலேயே படிப்பில் கெட்டிக்கார ராக இருந்ததுடன் உயரமான மாமரக் கொப்புகளில் தனிமையில் இருப்பது இவரது பொழுது போக்கு.

கல்வி

கொழும்புத்துறையில் அந்நாளில் இருந்த ஒரு கத்தோலிக்க பாதிரிமாரின் நிறுவனமொன்றில் ஆரம்பக்கல்வியையும் பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலமும், தமிழும் படித்தார்.

அரசுப்பணி

பள்ளிப்படிப்பு முடிந்ததும் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராக அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்திட்டத்தில் பணிபுரிந்தார்.

தம்முடைய உத்தியோகக் கடமைகள் தவிர கனிதரும் மரங்களை நட்டுக் கவன மாகப் பராமரித்து வந்தார். அவ்வாறு அவர் நட்டு பராமரித்த மாமரம் ஒன்று இன்றும் "சுவாமியார் மரம்" எனும் பெயருடன் கிளிநொச்சியில் உள்ளது.

செல்லப்பா சுவாமிகளுடன் ஐக்கியமாதல்

1905ம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில் செல்லப்பா சுவாமியைக் கண்டதிலிருந்து இவர் வாழ்க்கை திசை மாறியது. இவரைக் கண்டவுடனேயே செல்லப்பா சுவாமி சிங்கக் கர்ச்சனையாக "யாரடா நீ?" என உலுக்கி" ஒரு பொல்லாப்பும் இல்லை!" என உறுமினார். செல்லப்பா சுவாமியின் குரலிலும் பார்வை கூர்மையிலும் கட்டுப்பட்ட சதாசிவம் அக்கணமே வேலையை உதறிவிட்டு சாமியிடம் சரணடைந்தார்.

யோக சுவாமிகள் கொழும்புத்துறையில் ஆசிரமம்

குரு தீட்சை பெற்று கொழும்புத் துறைக்குச் சென்று, அங்கு ஒரு இலுப்பை மரத்தடியில் அமர்ந்து சிறிது காலம் மோன சுகத்தில் திழைத்தார். செல்லப்பா சாமி 1911இல் சமாதி அடைந்த பின்னர் சாமியின் பக்தர்கள் கொழும்புத் துறையில் சிறு குடில் அமைத்துக் கொடுத்தார்கள். அங்கு சுமார் ஐந்து வருடங்கள் கடும் தியானம் புரிந்தார். ஆனால் யோகருக்கும் குருவைப் போன்று ஊர் சுற்றுவது பிடித்த காரியம்.யோகர் கால் படாத தெருவே யாழ்ப் பாணத்தில் இல்லை எனலாம். வேட்டி, சண்டிக்கட்டு, தோளில் ஒரு துண்டு

இவற்றுடன் எங்கும் நடந்து திரிவார். யாழ்ப்பாணம் மட்டுமல்லாது இலங்கையின் மற்றைய பகுதிகளுக்கும் சென்று பக்தர் களுக்கு அருள்பாலித்து வந்தார். வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் இவருக்கு பக்தர்கள் இருந்தனர்.

டிசம்பர் 1934இல் சிவதொண்டன் என்ற பெயரில் ஒரு மாதாந்த சஞ்சிகையை ஆரம்பித்து நடாத்தினார். 1940ஆம் ஆண்டில் யோக சுவாமி தல யாத்திரைக் காக இந்தியா சென்றார். காசி, சிதம்பரம் என்று பல இடங்களுக்கும் சென்றவர், ரமண மகரிஷியை அவரது அருணாச்சல ஆசிர மத்தில் சந்தித்தார்.

சமாதி

மார்ச் 1964ஆம் ஆண்டு மாலை 3:30 மணியளவில் யோக சுவாமிகள் தனது 91வயது வயதில் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலையத்தில் திருவடிக் கலப்புற்றார்.

நான்கு மகா வாக்கியங்கள்

செல்லப்ப தேசிகர் யோக சுவாமி களுக்கு ஞானத்தைப் போதிக்கும் வகையில் அருளிய மாணிக்கமணியனைய வார்த்தை களை யோக சுவாமிகளும் தன் பக்தர் களுக்கும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார். மேலும் இவற்றை தன்னுடைய நற்சிந்தனையிலும் பரவலாக விரவி வைத்தார். இவற்றை அவரது பக்தர்கள் மகா வாக்கியங்கள் எனப் பின்னாளில் வகைப் படுத்தினர். அவை பின்வருவன –

1. எப்பவோ முடிந்த காரியம்
2. நாம் அறியோம்
3. ஒரு பொல்லாப்பும் இல்லை
4. முழுதும் உண்மை



சுவாமிகளின் கையெழுத்து

நற்சிந்தனை

யோகசுவாமிகள் தன்னை நாடிவந்த பக்தர்களின் மனக்குறையை நீக்கும் பொருட்டும் அவர்களுக்கு இறை சிந் தனையை ஊட்டும் பொருட்டும் தன்னிடம் சுரந்த ஞான பானத்தை கீர்த்தனங்களாக வும், கவிதைகளாகவும் அவரவர் பக்கு வத்திற்குத் தக பாடியருளினார். இவற்றை அவரது அணுக்கத் தொண்டர்கள் தொகுத்து நற்சிந்தனை என்னும் திருநூலாக வெளி யிட்டனர். நற்சிந்தனை என்னும் ஒரு தமிழ்ச் சொல்லை தமிழிற்கு அறிமுகப்படுத்தியவர் யோக சுவாமிகளே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அருள்மொழிகள்

சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகள், சந்தசுவாமி, செல்லத்துரை சுவாமி, சிறி காந்தா என்பவர்களுக்கு அவ்வப்போது

ஆங்கிலத்திலும் தமிழிலும் அருளிய தெள்ளிய உயர்ஞான ரசங்கொண்ட அமுத வாசகங்களை சந்த சுவாமிகள் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்து "The Words of our Master" என்னும் தலைப்பில் சிவதொண்டன் சபையினூடாக வெளியிட்டார். பின்னர் செல்லத்துரை சுவாமிகள் இதனை எங்கள் ஆசான் அருள்மொழிகள் எனும் தலைப்பில் வெளியிட்டார்.

துறவுச் சீடர்கள்

யோகசுவாமிகள் இந்நிலவுலகில் உலவிய காலத்தில் ஆயிரக்கணக்கான பல்சமய, பல்மொழி அடியவர்கள் அவரது அணுக்கத் தொண்டர்களாக இருந்தனர். ஆனால் அவர்களில் சுவாமிகளின் வழி யினை நேர்நிலையாகப் பின்பற்றி துறவுச் சீடராகப் பரிணமித்தவர்கள் மூவரே.

1. மார்க்கண்டு சுவாமிகள், யாழ்ப்பாணம் கைதடியில் தென்னோலைக் கொட்டில் ஒன்றில் வாழ்ந்து வந்தவர்.
2. சந்தசுவாமி. இவர் இலங்கையின் கடைசி ஆங்கிலேய தேசாதிபதி சோல்பரி பிரபுவின் மகன். யோக சுவாமிகளைப் போலவே வேட்டி துண்டுடன் யாழ்ப்பாணக் கோவில் களில் உலாவியவர்.
3. செல்லத்துரை சுவாமி, இவர் சுவாமி களின் பணிப்பிற்கிணங்க சுமார் அரை நூற்றாண்டு காலம் யாழ்ப்பாணம், மற்றும் மட்டக்களப்பு சிவதொண்டன் நிலையங்களில் இருந்து பணியாற்றி 2006ஆம் ஆண்டு சமாதியடைந்தார்.

இவர்களைவிட சிவாய சுப்பிரமணிய சுவாமி, கிளிநொச்சி வடிவேல் சுவாமிகள் கௌரிபாலா (ஜெர்மன் சுவாமி), பரி நரிக்குட்டி சுவாமி (அவுஸ்ரேலிய இளைஞர்) ஆகியோரும் சுவாமிகளின் சீடர்கள் எனப் பின்வந்தோரால் போற்றப்படுகின்றனர்.

"சாமி என்றிருக்கின்றவர் தானும் மற்றவர்களைப் போலென்று எண்ண வேண்டும்" என்பதும் "நீங்களும் சுவாமி பண்ண வேண்டாம், மற்றவர்களையும் சுவாமி பண்ணவிட வேண்டாம்" என்பதும் சுவாமிகளின் வாக்குகள்.

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே
இரவு பகல் காணேனெடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே
நல்லூரான் தஞ்சமெடி

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

யோகர் சுவாமிகள்

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்

எமது காலத்தில் வாழ்ந்து மறைந்த சித்த புருஷர்களில் யோகர் சுவாமிகள் மிக மிக முக்கியமானவர். கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடர் யோகர் சுவாமிகளாகும். செல்லப்பா சுவாமிகள் உலகத்திற்குத் தன்னைக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்து மறைந்துபோன மகான். உலகத்தோர் கண்ணுக்கு பைத்தி யக்காரன்போன்றே காட்சியளித்தார். அதனால் உலகம் அவரை விசர்ச்செல்லப்பா என்றே பெயர் சூட்டி அழைத்தது. செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமி களுக்கு நான்கு மகா வாக்கியங்களை உபதேசித்தார். இந்த நான்கு மகா வாக்கி யங்களும் சகல சாஸ்திரங்களினதும் சாரம் கொண்டவை. ஆதலின் இவை மகா வாக்கியங்கள் என்று அழைக்கப்பட்டன.

ஒரு பொல்லாப்பு மில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுதும் உண்மை

சரித்திரப்பிரசித்தி பெற்ற மாவிட்ட புரத்திலே சைவ வேளாண் குலத்தில் அம்பல வாணர் என்னும் சைவப்பெரியார் ஒருவர் வாழ்ந்தார். இவரது தர்மபத்தினி சின்னாச்சி அம்மையார். இவர்களது பூர்வ புண்ணிய விசேடத்தினாலே 29-05-1872இல் அவிட்ட நட்சத்திரத்தில் ஓர் ஆண் மகவு பிறந்தது. பெற்றோர் இக்குழந்தைக்கு யோகநாதன் என்று நாமகரணம் சூட்டினர். அம்பலவாணரின் சகோதரர் சின்னையா என்பவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த கத்தோலிக்க பெண் ஒருவரை திருமணம் செய்து தமது பெயரை யோசேப்பு என்றும் மாற்றிக் கொண்டார்.

அம்பலவாணர் மஸ்கெலியா என்ற மலைப்பிரதேசத்தில் கடை ஒன்று நடத்தி வந்தார். யோகநாதனுடைய கல்வி விடயத்தை யோசேப்பு கவனித்து வந்தார். அதனால் யோகநாதன் மாவிட்டபுரத்தை விட்டு கொழும்புத்துறையில் வாழவேண்டிய சூழ்நிலை உருவானது. அக்காலத்தில் சைவப் பாடசாலைகள் மிகமிகக் குறைவு. அதனால் யோகநாதனின் கல்வி கத் தோலிக்கப் பாடசாலையிலேயே ஆரம்ப மானது. இளமையில் துடுக்குடையவ ராயும், பக்தி யுக்தி உள்ளவராயும் வாழ்ந்து வந்தார். யோக நாதனுக்கு வயது எட்டா யிருக்கும்போது தாயார் இறந்துவிட்டார்.

சிறிய தந்தையார் யோகநாதனுடைய கல்வியில் மிகுந்த ஊக்கம் காட்டினார். ஆங்கிலக்கல்வி கற்கும்பொருட்டு செம் பத்திரிசியார் கல்லூரியில் இணைக்கப் பட்டார். பகலில் சிறிய தகப்பனார் வீட்டி லும், மாலையில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருமையிலுள்ள தந்தைவழி மாமியா ராகிய முத்துப்பிள்ளை அவர்களுடைய இல்லத்துக்கும் போய்விடுவார்கள்.

எட்டாம் வகுப்புவரை ஆங்கிலம் கற்றார். அம்பலவாணர் யோகனை

அழைப்பித்து தேயிலைத்தோட்டம் ஒன்றிலே வேலைக்கு அமர்த்தினார். மலையகத்தின் இயற்கைச் சூழ்நிலை யோகனின் மனதைக் கவர்ந்தது.

ஒருநாள் யோகநாதன் சிவனொளி பாதம் சென்று சூரியன் உதிக்கும் காட்சி யினைக் கண்டு மகிழ்ந்து வந்தார். சிவனொளிபாதம் சென்றுவந்த யோக நாதன் இயற்கையின் சூழலிலே தமது மனதைப் பறிகொடுத்து விட்டார். அத னால்தன் பாட்டிலேயே பேசத் தொடங் கினார். இது எல்லாம் உண்மை. எனது உடம்பு சிவன் சொத்து. சிவனுக்கே அது சொந்தம். அவனையே தேடிப்போனேன். இந்த விபரீத எண்ணங்களைக் கண்ட தந்தையார் இவரை யாழ்ப்பாணத்திற்கே அனுப்பிவைத்தார்.

யோகர் சும்மா இருக்கமாட்டார். உத்தியோகத் தேடித்திரிவார். இரணை மடுக்குளக் கட்டிட வேலை நடைபெற்ற காலம். அங்கு சென்றபோது பிறவுண் என்ற பொறியியலாளர் பண்டகசாலை பாதுகாவலர் என்ற உத்தியோகத்தை இவருக்கு அளித்தார். உங்கள் கடமையை மறவாதீர்கள்' என்று எல்லோருக்கும் உபதேசித்த சுவாமிகள் நேர்மையாகவும் உண்மையாகவும் வேலை பார்த்தார். பொறியியலாளரிடம் ஒரு நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார்.

யோகநாதன் கிளிநொச்சியைவிட்டு மாவிட்டபுரம் திரும்பினார். அவருக்கு அப்போது வயது 32. தந்தையும் இறந்து விட்டார், தாயை எட்டு வயதில் இழந்தார். தந்தையை வாலிப வயதில் இழந்தார். ஆனால் மாவிட்டபுர கந்தன் கருணையை இழக்கவில்லை. கீரிமலையிலும் மாவிட்ட புரத்திலும் மாறிமாறி வசித்தார். கீரிமலை யிலிருந்து நடையிலேயே நல்லூருக்கு வருவார். ஆத்மீக தாகம் மேலிட்ட காலம். குரு ஒருவரைத் தேடி அலைந்த காலம். பற்றுக்கோடாக இருந்த இரு முது குரவரையும் இழந்த போது பற்றுக்கோடு ஒன்றை நாடினார். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்தார். செல்லப்பாச் சுவாமிகளின் பார்வை இவரை காந்தமெனக் கவர்ந்தது. குரு நாதனை சந்தித்த அனுபவத்தை அவரே கூறுகின்றார்.

கருத்தில் நினைந்துருகி கைகூப்புந் தொண்டர் வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் – திருத்தலத்தில் தேரடியில் தேசிகனை கண்டு தெரிசித்தேன், ஆரடா நீ என்றான் அவன்.

விசர்ச்செல்லப்பா என்று மக்களால் ஏசப்பட்ட செல்லப்பா சுவாமிகளைச் சூழ ஒரு கூட்டம் கூடத்தொடங்கியிருந்த காலம். செல்லப்பா சுவாமிகளின் அரிய சீடர்கள் கதிரவேலுச்சாமியும், யோக நாதனும் ஆவர். பெரும்பாலும் மூவரும் ஒன்றுகூடித் திரிவர். சண்டை போடுவர். சமையல் செய்வர். சமையல் முடியும் தருணத்தில் சட்டிபானையை உடைப்பர். இச்செயலைக் கண்டால் யார்தான் இவர்களைப் பைத்தியம் என்று கூறமாட் டார்கள்?

கொழும்புத்துறையில் சிற்றம்பலம் சம்பந்தர் என்னும் ஒரு சைவப் பெரியார் வளவில் றோட்டுப் பக்கமாக ஒரு இலுப்பை மரம். இந்த இலுப்பை மரத்தின் கீழே தான் யோகர் சுவாமிகளுடைய

அருந்தவம் நடைபெற்றது. கொழும்புத் துறை வளவில் இருந்த கடையொன்றைத் திருநாவுக்கரசு என்பவர் திருத்தி அமைத்துக் குடிசை ஒன்று கட்டிக் கொடுத்து, சுவாமிகளை அதில் தங்குமாறு அவரும் அவரது தாயாரும் அன்புடன் வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய அன்புக்கு கட்டுப்பட்ட சுவாமிகள் பூத உடலைவிட்டு உயிர் பிரியும் வரை அக்குடிசையிலேயே வாழ்ந்து வந்தார்கள். சுவாமிகளை நாடி நாள்தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் பெருங்கூட்டம். திரு முறைகள் பாராயணம் இடம்பெறும். எல்லாத் தரங்களிலும் உள்ள மக்கள் ஒன்றுகூடுவார்கள். ஆன்மீக தாகம் கொண்டவர்களும் வருவார்கள். தங்கள் இட்டல் இடைஞ்சல்களை தீர்த்துக் கொள்வதற்காகவும் வருவார்கள். சுவாமிகளை சோதித்துப் பார்க்கவும் வருவார்கள்.

சுவாமிகள் தம்மை நாடி வந்தவர் களுடைய உளப்பாங்கை அறிந்து அவர் களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள். சிலரை ஏசியும் துரத்து வார்கள். அதைப் பொருட்படுத்தாமல் தம்மை மேலும் மேலும் நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்கு வார்கள். அவர்களை ஏசுவதன் மூலம் அவர்கள் வினைகளைச் சுவாமிகள் தொலைத்துவிடுவார்கள். இவ்வுண்மையை உணர்ந்த அடியார்கள் சுவாமிகளின் மறமயக் கருணையை நினைந்து நினைந்து ஆனந்த பாஷ்பம் சொரிவார்கள்.

"எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு இனம்" என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர்களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும். 'எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் எல்லோரும் சமம்" என்றும் கூறுவார்கள். "நீயும் மனிதன் நானும் மனிதன் உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள். இங்கே ஏன் வருகின்றீர்கள்? நாங்கள் பிச்சைக் காரர்கள், நாங்கள் சும்மா இருக்கின்றோம். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று ஏசிக்கலைப்பதும் உண்டு.

"கர்மவினையால் எமக்கு இப்பிறவி வந்தது. நாம் ஒன்றும் அறியோம், நாம் ஏன் இங்கு பிறந்தோம்? இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை. அதனால் பாதகமும் இல்லை, பிறப்பு வர இருந்தது, வந்துவிட்டது. நாங்கள் ஆத்மலாபத்தை நல்லாய்த் தேடிக் கொள்ளலாம்" என்று உபதேசம் செய்தார்கள்.

சுவாமிகளுடைய உபதேசங்களை எல்லோருக்கும் பரப்ப வேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமி களிடம்மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள் விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து நாம் எல் லோரும் சிவத்தொண்டர்கள், நாம் செய்வது சிவத்தொண்டு. ஆகவே எமது வெளியீடும் 'சிவத்தொண்டாக' இருக்கட்டும் என்றார்கள். 1935ஆம் ஆண்டு மார்கழி மாதம் முத லாவது இதழாகிய சிவத்தொண்டன் திரு.க.கி.நடராசன் அவர்களை ஆசிரிய ராகக் கொண்டு வெளிவந்தது. சிவதொண்ட னுக்கு நிலையம் ஒன்று காங்கேசன்துறை வீதியில் 4-11-1953இல் உருவானது. அந்த நிலைய மேல்மாடியில் இன்னும் தியான மண்டபத்தில் சுவாமிகளுடைய ஆத் மீக அலையை இன்னும் அனுபவிக்கலாம்.

சுவாமிகள் தமது அடியார்கள் எங் கெங்கு இருந்தார்களோ அங்கங் கெல்லாம் செல்வார். யாருக்கும் அறி வித்தல் கொடுக்க மாட்டார். இருந்தாற் போல் ஒரு அடியவருடைய வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்ற அடியவர்கள் எல்லோரும் அங்குவந்து கூடுவர். அவர்களுக்கெல்லாம் நல்லுபதேசம் கிடைக்கும். சில சமயம் கண்மூடி சிவ யோகத்திலே ஆழ்ந்து விடுவார். அன்பர் களும் தியானத்தில் மூழ்கி ஆனந்தம் பெறுவர். இரண்டு வருட காலம் சுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தைவிட்டு எங்கும் செல்லவில்லை. 24-03-1964 செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள். சுவாமிகளுடைய குரு பூசை ஆயிலிய சட்சத்திரத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எவ்வுயிரும் பெருமான் முன்னிலை யென்று கருணை செய் கடவுள் உள்ளும் புறப்பும் உள்ளார்.

சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவரது சீடர்களான மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் போன்றோர் அவரது பணியை முன்னெ டுத்துச் சென்றார்கள்.

தன்னை அறிந்தால் தவம் வேறில்லை

தன்னை அறிந்தால் தவம் வேறில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே
பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லைத்
தன்னை யன்றிச் சகம்வே றில்லைத்
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே
ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லை சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே
நன்மையுந் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையும் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே
காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முழவு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே
"குருவே சரணம்" இநத வார்த்தையைத் தவிர வேறெதுவும தோன்றவில்லை.

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள்

சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

என்னைஎனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இனையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்

நமது ஈழ நாட்டிலே நமது கண்முன்னே சீவன்முத்தராக வாழ்ந்து 1964ஆம் ஆண்டு இறைபதமடைந்த யோகர் சுவாமிகளை நினைவுகூருவது பெருந் தவப்பேறாகும். சுவாமிகள் ஒரு நடமாடுந் தெய்வமாக நம்நாட்டில் (ஈழத்தில்) காட்சியளித்தவர். வாழ்வின் முற்பகுதியை அரசாங்க உத்தியோகத்திற் கழித்த போதிலும் ஓய்வு நேரத்தைத் தியானத்திலும் மௌனத்திலும் செலவு செய்தார். இவருடைய குரு செல்லப்பா சுவாமிகள் என்பவர். நல்லூர்த் தேர் மண்டபத்தில் தம் குருவின் மேற் பார்வையில் சுவாமிகள் நாற்பது நாள் தவமிருந்தார். இதன் பின்னர் இருப்பை மரத்தடியில் நிட்டையில் இருந்தார். தம்மைத் தரிசிக்க வருவோருக்கு உபதேசம் செய்வதும் அவருடைய ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் அவர் கடமையாக இருந்தது. அத்துடன் "சிவதொண்டன்" என்னும் மாத இதழ் மூலம் மக்களுடைய கருத்துக்களுக்கு நல்விருந்தளித்தார். சுவாமிகள் அடிக்கடி கூறும் மந்திரங்களை நாம் சிந்தையில் இருத்தல் வேண்டும் : **"சும்மா இரு", "எப்பவோ முழந்த காரியம்", "நாம் அறியோம்", "முழுவதும் உண்மை". "ஒரு பொல்லாப்புமில்லை"** – இவற்றின் உண்மைகள் நினைந்து நினைந்து இன்புறுதற்குரியவை.

இவருக்கு இளம் பிராயத்தில் கிறிஸ்தவ பாடசாலையிலே கல்வி கற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், நாவலர் பெருமானைப் போன்று அந்தச் சூழலிலேதான் சமய விழிப் புணர்ச்சி பெறக்கூடிய மனப்பாங்கும் ஏற் பட்டது. பெற்றோரை இளவயதில் இழந்த வரானபடியால் வாழ்க்கையைப் பற்றிய அல்லல்களும் துன்ப அனுபவமும் சேர்ந்து இன்பவழிக்கு இழுத்துச் சென்றது. அவர் தமக்குமுன் வரும் துன்பம் மீதூரப் பெற்ற வர்களை ஆதரித்து அறிவுகூறி இன்ப வழியைக் காட்டிவைத்தார். அறியாத வனுக்கு அறிவைக் கொடுத்தும் இருட் டறையில் இருந்தவனுக்கு ஒளியைக் காட்டியும் நற்பணி புரிந்தார். இவரை நோக்கிப் பலதரப்பட்ட மக்கள் படையெடுத்தனர். பிரபுக்கள், மந்திரிகள், பட்டதாரிகள், பண்டிதர்கள், பாமரர்கள் எல்லோரும் இவரிடஞ் சென்று அருட்பார் வைக்கும் நல்வாக்குக்கும் தவம் கிடந்தனர். தவறு செய்தவர்கள் கூட அவர் முன்னிலையில் தம் தவறுகளைக் கூறி மனச்சாந்தி அடைந்தனர். வழிபடுவோர் கூட்டத்திற்கு அவர் காட்டிய வழிபாட்டு நெறி மிக இலகுவானதாகும். உங்கள் மனதில் ஆண்டவன் எப்படிக் காட்சியளிக்கிறானோ அந்த நிலையிலேயே வழிபடுங்கள் எனக் கூறியவர்.

இவருடைய இளமைக்காலம் ஆத்மீகத் துறைக்குப் பல வழிகளையும் ஆக்கிக்

கொடுத்தது. நீர்ப்பாசன இலாகாவில் கடமைபுரிந்த இவர், கடமையின் இடையிலே தோத்திரங்களையும் சாத்திரங்களையும் நன்றாகப் பயின்று வந்தார். அவர் உள் ளத்தை ஈர்த்த சிறந்த நூல் பெரியபுராணம். இதற்கு மேலாக, செல்லப்பா சுவாமிகளின் ஞானத் தொடர்பு வாழ்வை முழுமை யடையச் செய்துவிட்டது. செல்லப்பா சுவாமிகள் தமது சீடரை நாடோறும் பரீட் சித்து அவர் பக்குவநிலையைக் கண்டு ஞானத்தை உணர்த்தத் தொடங்கினார். ஆண்டி வேடத்தில் நல்லூர் வீதியில் காட்சியளித்த அவர், யோகர் சுவாமிகளுக்கு ஞானம் உணர்த்தும் குருவாக அமைந்தமை திருவருட் செயலே. இந்த நிலையை நற் சிந்தனையிலே சுவாமிகள் பாடியுள்ளார்.

நல்லூர் வெளியிலே வாதுநடம் புரிகிறான்
நங்கள் குருநாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரையுந்தன் னிடத்திலே காண்பவன்
இயமநிய மங்களில் எள்ளளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்

ஆறறிவாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பான்
பேரறிவாளனைப் பிறரெவரு மோவறியார்
பித்தனென் றுலககோர் பேசுவா ரேசுவார்.

தனது குருவினிடமிருந்து தான் பெற்ற அனுபவத்தைத் தன்னை வந்து அடைபவர் களுக்கு வழங்கவேண்டும் என்று முன் வந்தார். அவரிடம் தரிசனத்துக்குச் சென்ற வர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன் போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்பு வார்கள். இறைவனையும் இறைவனை வழிபடும் அடியவர்களையும் வழிபட வேண்டும் என்பதையே திரும்பத் திரும்பக் கூறுவார். ஆண்டவன் எம்மை விட்டு அகலாமல் இருக்கிறான் என்றும் அதே நேரத்தில் நாம் ஆண்டவனைப் புறக் கணித்து அகலச் செல்ல உலக பாசம் எம்மை இழுக்கிறது என்றும் சொல்வார்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய பேறிழந் தாரே.

என்பது திருமந்திரம். எனவே, மானிடப் பிறவி மகத்துவம் அடைய வேண்டுமானால் சிவத் தியானமும் சிவத் தொண்டும் முக்கியமாகும். மாணிக்கவாசக சுவாமிகள் குருந்தமர நிழலில் குரு உபதேசம் பெற்று ஞானநெறியை உலகுக்குக் காட்டியது போல் யோகர் சுவாமிகளும் தான் பெற்ற அனுபவ இன்பத்தை உலகுக்கு வழங்கினார். சிவபுராணம் பாடிப் பரவுதலும் தன்னடிய வர்களைப் பாட வைப்பதும் அவருடைய தினாந்தர கடமையாக இருந்தது. நேரங் கிடைக்கும் போதெல்லாம் வேதாகம உண்மை களை உணரக் கூடியவர்களுக்கு விளக்குவார். ஒருமுறை மகாத்மா காந்தியடிகளை இரு ஐரோப்பியர்கள் தரிசித்துவிட்டு யோகர் சுவாமிகளையும் தரிசிக்க வந்தார்கள். அவர் களுடைய நல்வாக்குக்காகக் காத்திருந் தார்கள். "காந்தியடிகள் என்ன சொன்னார்" என்று கேட்டார் சுவாமிகள். "ஒன்றே குலம் ஒன்றே கடவுள்" என்றார் எனச் சொன் னார்கள். "ஆம், இதனைவிட நான் வேறு எதனைக் கூறுவது" என்றார் யோகர் சுவாமிகள். இவர்களின் ஞான பக்குவத்தை நோக்கியே இலங்கைத் தேசாதிபதி சோல்பரிப் பிரபுவின் மகன் பிரதம சிஷ்ய ராகி இவர் வழி நின்று மட்டக்களப்பைச்

சேர்ந்த செங்கல்லடியில் கடமையாற்றி வருகிறார். "வேலையே வணக்கம்" என்று அடிக்கடி அவர் கூறுவார்.

மதம், இனம், மொழி என்ற பேதம் நோக்காது தன்னிடம் யார் யார் வருகை தந்த நேரத்திலும் அவ்வவர் மனக் கருத்தை அறிந்து ஆவன கூறிவிடுவார். ஒரு சமயம் ஸ்ரீ ரிக்கிரிபண்டா திச நாயக்கா என்ற பேருடைய புத்தசமயப் பிரமுகர் ஒருவர் முதல்முறை இவரைச் சந்திக்கச் சென்றார். சுவாமிகள் கையில் தும்புத்தடி கொண்டு கூட்டிக்கொண்டு நின்றார். வந்தவரைக் கண்டவுடன் திச நாயக்கா வாருங்கள் என்று அழைத்தார். அடுத்து "நீ உன்னை நினைத்துக்கொள், ஆண்டவனின் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கு, சும்மா இரு" என்றார். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். அவருடைய உபதேசங்கள் கேட்டாரது உள்ளங்களைப் பிணித்துவிடும். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் அவர் வெளிக்காட்ட வில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கை யிலும் சுவாமிகள் பின்னிப் பிணைந்து விட்டார். நோய் நொடிகளுக்கு எல்லாம் அவர் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்றமுடியாத கொடிய வியாதிகளையெல்லாம் இவர் மாற்றி யுள்ளார். உடல்நோய், உளநோய், உயிர் நோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

சுவாமிகளின் தெய்வத் தோற்றம் பார்த்தாரைப் பரவசப்படுத்தும். வால்நரை முடியும், அருளொழுகும் கண்களும் சிரித்த முகச் செவ்வியும் கண்டார் நெஞ்சைக் கவரக்கூடியன. எத்தனையோ முனிவர்கள், இருடிகள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக் கிறோம். ஆனால் நாம் கண்கண்ட ஒரு பெரும் முனிவர்தான் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். கல்லைப் பிசைந்து கனியாக்கி என்று பாடினார் மாணிக்க வாசக சுவாமிகள். அதேபோன்று இரும்பு தரும் நெஞ்சங்களை, பதவி மோகம் பிடித்த உள்ளங்களை, பணம் படைத்த இறுமாப் புடன் வாழ்ந்தோர் இதயங்களை ஈர்த்து ஈர்த்து உருக வைத்தவர் இந்த முனிவர். மக்கள் எல்லோரும் சிந்தையிற் கடவுளும் செயலிற் தூய்மையும் கொண்டு ஒழுக வழிகாட்டினார். இன்று அவர்களின் சிஷ்யர்கள் பலர் நம் நாட்டில் சமயம் வளர்க்கும் பெரும்பணியைப் புரிந்து வருகிறார்கள்.

சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனைச் செய்யுள்கள் அற்புதமானவை. படிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துபவை.

"காகம் உறவு கலந்துண்ணக்கண்டீர் அகண்டா காரசிவ
போகமென்னும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப்
– பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ இன்புற்றிட நாமெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே"

என்றார் தாயுமான சுவாமிகள். எங்கள் யோகர் சுவாமிகளும் நற்சிந்தனைப் பாடல்களின் மூலம் எம்மை ஆண்டவன் திருவருள் பெற அழைக்கிறார்.

"வழுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே."

நல்லூர்ப் பதியில் குரு தரிசனம் பெற்ற வராகையால் அப்பதியைக் குறித்து அதிக மான நற்சிந்தனைப் பாடல்கள் பாடி

யுள்ளார். பாடல்கள் முழுவதிலும் வேதாந்த சித்தாந்த கருத்துக்கள் நிறைந்து மிளிர்கின்றன. சுவாமிகளின் உள்ளம் திருவாசகத்தில் திளைத்திருந்தமையை அவர் பாடல்கள் சிறப்பாகக் காட்டுகின்றன.

"பொறிவழியே போய்க்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்று உரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில் சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே".

இது கண்டபத்து என்ற பகுதி; குரு தரிசனங் குறித்துப் பாடியதாகும். மாணிக்க வாசக சுவாமிகள் தில்லையிலே பாடிய கண்டபத்தை இது ஞாபகமூட்டுகிறது.

நாயன்மார்கள் எல்லோரும் நிலை யிலாப் பொருளை எடுத்துக்காட்டி அவ்வழி நாட்டம் செலுத்தாது நிலையான பொரு ளாகிய பரம்பொருளை நாடவேண்டு மென்றே வழிகாட்டினர். "நீ நாளும் நல் நெஞ்சே நினை கண்டாய்" என்றும் "புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்" என்றும் பாடிப் பாடி அறிவுறுத்தினார்கள். அந்த வழியிலே சுவாமிகளின் அறிவுறுத்தலைப் பார்ப்போம்.

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உளூற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான் ஆதலின்
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

இலகுவான முறையில் எம்மை உணர வைக்கும் திறனை இங்கு காணலாம். குருவாசகங்களாக அவரருளிய ஞான மொழிகளை எமது சிந்தையில் இருத்தல் வேண்டும். "எதை நீ பாவனை செய் கின்றாயோ அது நீ யாவாய்" எனபதும் "எப்பவோ முடிந்த காரியம்" என்பதும் "ஒரு பொல்லாப்பு மில்லை" எனபதும் என்றும் சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத பொன் மொழி களாகும்.

யாழ்ப்பாணமும் ஈழநாடும் செய்த தவப்பயனாகத் தோன்றிய அவரது எண் ணங்களும் அருள் வாக்குகளும் என்றும் எம் இதயத்தை விட்டு நீங்கா. அவர்களின் ஞாபகமாக விளங்குகின்ற சிவதொண்டன் சஞ்சிகையைப் போற்றி ஆதரிப்பது சைவ மக்களாகிய எமது பெருங்கடனாகும்.

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம்சி வாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே!

(நன்றி : மலேசியா சுற்றுப்பிரயாண சொற்பொழிவு
அன்புநெறி : மலர் 3 இதழ் 8)

எல்லாம் அவன் செயல்

ஆண்டவனையன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையுந் திருவடிக் கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக்கிடங்கொடாதே. நான் செய்தேன், அவன் செய்தானென்று நலியாதே! விழித்திரு.

– யோகர் சுவாமிகள்



தெல்லிப்பழை துர்க்கையம்மன் சிறிய ஆலயமாக விளங்கிய காலத்தில் யோக சுவாமிகள் கோவிற் சூழலில் நீண்ட தவத்தில் இருந்துவிட்டுச் செல்வாராம். சுவாமிகள் ஒருமுறை பிரம்பால் நிலத்தில் அடித்து கந்தபுராணம் பாடுங்கள் கோவில் எழுச்சிபெறும் எனக் கூறி ஆசி வழங்கினார். அவரது கருத்திற்கு அறங்காவலர் மதிப்புக் கொடுத்தனர். துர்க்கையம்மன் பெருங்கோவிலாக இன்று காட்சியளிக்கிறது. பழைய நிலையை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி ஜெயந்தி அவர்கள் ஓவியமாக வரைந்துள்ளார்.

சிவயோக சுவாமிகளின் இறுதி ஊர்வலம் - 15-03-1964





சுவாமிகளின் நிறைவுக் காட்சி மலர்ப்படுக்கையில்

கொழும்புத்துறை துண்டி
மயானம் நோக்கிய
நிறைவு ஊர்வலம்

சுவாமிகளின் கடிதம்

நான் உங்களுக்கு சொல்லக்கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்கும் பகவான் நல்லருள் புரிவார். எல்லாருக்கும் என அன்பார்ந்த வணக்கத்தைச் செய்கிறேன்.

செய்வன திருந்தச் செய்
மூத்தோர் வார்த்தை அமிர்தம்

– இப்படிக்கு
அவனே தானே

உலக உலாவுக்காக யோக சுவாமிகளின் விக்கிரகம் அமெரிக்காவில் புறப்படும் காட்சி. இத்திருவுருவம் பல நாடுகளில் பிரார்த்திக்கப்பட்டுத் தற்போது யாழ் மண்ணுக்கு வந்து சேர்ந்துள்ளது. 10-04-2014 நல்லூர் தேரடியில் விசேட வழிபாடு செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள்.



ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கீரிமலை சிவபூமி மடத்தில் இத்திருவுருவத்தை நிறைவில் ஒப்படைக்கவுள்ளார்.

யோகசுவாமிகளின் நினைவாக சிறப்போடு இயங்கும் சிவதொண்டன் நிலையம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.













அருள்வளம் நிறைந்த மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் பங்குனித் திங்கள் சிறக்க அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
32வது ஆண்டு நிறைவு விழா - 2014



விருந்தினர்கள்
அழைத்துவரப்படுகிறார்கள்

வாழ்நாள் பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
அவர்கள்
மங்கல
விளக்கேற்றுகிறார்.

பிரதம விருந்தினர்
பேராசிரியர் கா.குகபாலன்
அவர்கள் மங்கல
விளக்கேற்றுகிறார்



கௌரவ விருந்தினர்
திரு.கு.கௌதமன் அவர்கள்
மங்கல விளக்கேற்றுகிறார்.



திரு.ம.இராஜகுலசூரியர்
அவர்கள் (கனடா)
மங்கல விளக்கேற்றுகிறார்.

சிரேஷ்ட மாணவி
செ. தமிழ்விழி அவர்கள்
ஆண்டறிக்கை
சமர்ப்பிக்கிறார்.

மகளிர் இல்லத் தலைவர்
செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
அவர்கள் உரையாற்றுகிறார்.

இல்ல அதிபர்
திருமதி. சிவமலர்
அனந்தசயனன் அவர்கள்
உரையாற்றுகிறார்.



சிறப்பு விருந்தினர்
வைத்திய நிபுணர்
கௌரி செல்வரட்ணம்
அவர்கள்
உரையாற்றுகிறார்.

தேசகீர்த்தி
ச. ஆறுமுகநாதன் அவர்கள்
முதற்பிரதி பெறுகிறார்.



வைத்திய நிபுணர்
திருமதி ஜெயதேவி
கணேசமூர்த்தி அவர்கள்
கௌரவ பிரதி பெறுகிறார்.



மாகாணசபை
உறுப்பினர் கௌரவ
திரு.த.சித்தார்த்தன்
(தர்மகர்த்தா சபை)
அவர்கள்
கௌரவ பிரதி பெறுகிறார்.

பிரதம விருந்தினரால்
ஓவியக் கண்காட்சி
திறப்புவிழா

யாழ். நுண்கலைப்பீடம்
(சித்திரமும்
வடிவமைப்பும்)
மாணவி அ. ஜெயந்தினி
அவர்களின்
ஓவியக் கண்காட்சி

அன்னையருடன்
வைத்திய நிபுணர்
கௌரி செல்வரட்ணம்
அவர்கள்

அன்னையருடன்
வைத்திய நிபுணர்
கௌரி செல்வரட்ணம்
அவர்கள்



இல்ல மாணவி
பரிசு பெறல்

இல்ல மாணவி
பரிசு பெறல்

கலைநிகழ்ச்சி
'வள்ளி திருமணம்'

கலைநிகழ்ச்சி
'வள்ளி திருமணம்'

கலைநிகழ்ச்சி
'வள்ளி திருமணம்'

வித்தின்றி நாறு செய்வான்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தர் அவர்கள்

இந்த நாட்டைப் பொறுத்தவரை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சராசரி மனிதரிலும் பன்மடங்கு உயர்ந்து நின்ற மகாத்மாக்கள் பலருண்டு. ஒரு சிலர் தம் பாடல்கள் மூலம் தாம் யார் என்பதை உலகிற்கு அறிவுறுத்தினார்கள். திருமூலர், பாம்பாட்டிச் சித்தர், சிவ வாக்கியர் போன்றவர்கள் தம் பாடல்கள் மூலம் மக்கள் சமூாயத்திற்கு வழிகாட்டி யவர்கள் ஆவார்கள். இதன் எதிராக வேறு பல சித்தர்கள் தாங்கள் வாழ்கின்ற காலத்தில் தம்மை வந்தடையும் மக்களின் குறைகளைப் போக்கி நல்வாழ்வு வாழ வழி செய்தவர்கள் ஆவார்கள்.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் வாழ்ந்து 1964ஆம் ஆண்டு வீடு பேறு டைந்தவர்கள் யோகசுவாமிகள் ஆவர். இவர் ஒரு தனிப்பட்ட இடத்தில் சிறிய குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டு அதனுள் இருந்து வந்தார். அந்தக் குடிசையுள் நுழைய வேண்டுமானால் யாராக இருந்தாலும் குனிந்து இடுப்பை வளைத்துக்கொண்டு தான் உள்ளே செல்ல முடியும். மீண்டும் வெளியே செல்வதும் இதேமுறையில்தான். அந்த நாட்டை ஆண்ட பிரதம மந்திதி முதல் ஆங்கிலேயர் வரை மிகப் பலர் சுவாமிகளிடம் அன்பு பூண்டு வந்தனர். சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், ஆங்கிலேயர் என்ற எந்த வேறுபாடுமின்றிச் சுவாமிகளிடம் ஒவ்வொரு நாள் மாலையும் மக்கள் கூட்டம் திரண்டு நிற்கும். குடிசைக்கு அதிகமாக நின்றால் பதினைந்து அல்லது இருபது பேர்தான் நிற்கமுடியும். இவ்வாறு நிற்பவர்கள் தம் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியே சென்ற பிறகு தான் அடுத்த கூட்டம் உள்ளே நுழைய முடியும். ஒவ்வொருவரும் காணிக்கையாகப் பழங்களை வாங்கி வந்து சுவாமிகளின் திருவடிகளில் வைத்து வணங்குவார்கள். எந்த ஒன்றையும் சுவாமிகள் எடுத்து வாயில் போட்டதாகத் தெரியவில்லை.

குறைதீர்க்க வேண்டி வந்தவர்கள் வாய்விட்டுத் தம் குறைகளைச் சொல்லும் பழக்கமில்லை. எனவே பதினைந்து இருபது நிமிடங்கள் ஒரு கூட்டம் உள்ளே நின்றாலும் ஒருத்தர் கூட வாய்திறந்து எதனையும் சுவாமிகளிடம் கூறிய தில்லை. இந்த நடைமுறையின் பொருளை நான் தெரிந்து கொள்வதற்குச் சிறிது காலம் பிடித்தது. 1950 வாக்கில் முதன் முறையாகச் சுவாமியைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அதற்கு முன்னர் சுவாமிகளைப் பற்றி அதிகமொன்றும் தெரிந்து கொண்டதில்லை. முதன் முறை யாக என்னை அழைத்துச் சென்றவர் வழக்கறிஞர் சிவசுப்பிரமணியம் என்ற ஓர் அன்பர் ஆவர். உள்ளே சென்று சுவாமி களை விழுந்து வணங்கிவிட்டு ஏனையோர் களுகளுடன் நானும் நின்று கொண்டி ருந்தேன். திடீரென்று சுவாமிகள் "எடே! பொடியன் இங்காலை வந்திருக்கட்டும்" என்று கூறிவிட்டு வலப்புறம் கையைக் காட்டினார்கள். என்னைத்தான் சுவாமிகள் குறிப்பிட்டார்கள் எனத் தெரியாத நானும் நின்று கொண்டிருந்தேன். சுவாமிகள் விரலினால் சுட்டிக்காட்டி "பொடியா

உன்னைத்தான்" என்று கூறினார்கள். இப்பொழுது என்னை ஒரு பயம் கௌவிக் கொண்டது. சுவாமிகளிடம் நிற்பவர்கள் யாரும் எதிரே உட்காருவதில்லை என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அப்படியிருக்க நான் மட்டும் எப்படி அமர்வது என்று அஞ்சி நிற்கையில் கருணை நிறைந்த பார்வையோடு "வா மகனே இங்கே வந்து உட்கார்" என்று கூறிவிட்டு வல்க்கையால் அமரவேண்டிய இடத்தையும் தொட்டுக் காட்டினார்கள். அன்றுமுதல் எத்தனையோ தடவைகள் சுவாமிகளிடம் சென்றுள்ளேன். ஒவ் வொரு முறையும் வீழ்ந்து வணங்கிய வுடன் அமரச் செய்வார்கள். முதல் இரண்டு தடவைகளில் சுவாமிகள் சொல்லிக் கொண் டிருந்தவை என் மனத்தில் குழப்பத்தை விளைவித்தன. சுவாமிகள் விடாமல் பாடிக்கொண்டே இருப்பார்கள். கூர்ந்து கவனித்தபொழுது திருவாசகத்தில் அரையடி, தேவாரத்தில் ஒன்றரையடி, திருவிசைப்பாவில் நாலு சொற்கள் என்று மாறி மாறிப் பாடிக்கொண்டிருந்ததை அறிந்தேன். என் போன்ற விபரம் புரியா தோருக்கு ஏன் சுவாமிகள் இப்படி அரையடி முக்காலடி என்று பாடுகிறார்கள் என்ற சந்தேகம். வெளியே வந்து நண்பர்களைக் கேட்டபோது எப்போதும் சுவாமிகள் இப்படித்தான் பாடிக்கொண்டே இருப்பார்கள் என்றார்களே தவிர யாரும் என் ஐயத்தைப் போக்கவில்லை. உள்ளி ருந்து வெளியே வந்த அன்பர்களைக் கண்டு பேசும் போது ஓர் உண்மை தெரிய லாயிற்று. நாங்கள் பெரும் குறையோடு இருந்ததாகவும் சுவாமிகள் பாடிக்கொண்டி ருக்கையில் தம் மனத்துள் புகுந்து பெரிய அமைதியைத் தந்ததாகவும், தம்முடைய பிரச்சினைகட்கு அப்பாடல்கள் விடையாக அமைந்ததாகவும் கூறினார்கள். வரு பவர்கள் வாய்விட்டுக் குறைகளைக் கூறு வதுமில்லை. தங்களுக்கு என்ன குறை யென்று அந்த மகாபுருஷர் கேட்பது மில்லை. ஆனாலும் வருபவர்க்கு அமைதி கிடைத்துவிடும். கம்பநாடன் "வாராதே வரவல்லாய்" என்று கூறுவதன் பொருளைச் சுவாமிகளிடம் இருக்கும்போது தெரிந்து கொள்ள முடிந்தது.

ஏறத்தாழ இருபது தடவைகளுக்கு மேல் சுவாமிகளைத் தரிசித்திருக் கின்றேன். ஒவ்வொரு முறையும் நான்கு ஐந்து நாட்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பேன். ஆதலால் அன்றன்று என் சொற்பொழிவு முடிந்தவுடன் இந்த மகானின் சந்நிதிக்குச் சென்று அரை மணியோ ஒரு மணியோ அவரின் திருவடிக்கீழமர்ந்து அவரின் அருளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அவற்றைத் தொகுத்துக் கூறுவதானால் ஒரு நூலாகவே ஆகிவிடும். எனவே நான்கு நிகழ்ச்சிகளை மட்டும் அடியேன் தருகிறேன். இப்பெருமகனார் எல்லாம் வல்ல சித்தர் என்பதை நிரூபிக்க இந்த நிகழ்ச்சிகள் துணைபுரியும் என்று நம்புகின்றேன்.

திருவாளர் ஸ்ரீகாந்தா என்பவர் யாழ்ப்பாணத்தில் கலெக்டராகப் (அரச அதிபராக) பணிபுரிந்து வந்தார். அவரும் அவர் மனைவியாரும் சுவாமிகளிடம் பெரும் பக்தி கொண்டவர்கள். அவர் களுடன் தங்கியிருந்த நானும் சுவாமி களைப் பற்றி அவர்களிடம் பேசிக் கொண் டிருப்பதில் பெரு மகிழ்ச்சி அடைவேன். ஒருமுறை கதிர்காமத்தில் ஆடிவேல் விழா நடைபெறுகின்ற சமயமாக இருந்தது.

திருவாளர் ஸ்ரீகாந்தா எங்கிருந்தாலும் ஆடிவேலுக்குக் கதிர்காமம் செல்வது வழக்கம். ஆனால் இம்முறை ஊரை விட்டுப் போகக்கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்ததால் போக முடியவில்லை என்று வருந்தினார். நெருங்கிய நண்பர் ஆகிய அவர் "அ.ச.ஐயா! யோகசுவாமிகள் தவறாமல் ஆடிவேலுக்கு கதிர்காம் போய் விடுவார்கள். இந்த ஆண்டும் போயிருப் பார்கள். நமக்கோ போகமுடியவில்லை. சுவாமிகள் தங்கியிருக்கும் குடிலுக்குச் சென்று அமரும் பீடத்துக்கு ஒரு கும்பிடு போட்டு வரலாம் வாருங்கள்" என்றார். அதை ஏற்றுக்கொண்டு நான் புறப்படத் தயா ரானேன். நானே காரை ஓட்டவும் ஏற்றுக் கொண்டேன். முதல் இருக்கையில் ஸ்ரீ காந்தாவும் நானுமிருக்க பின் இருக்கையில் திருமதி. ஸ்ரீகாந்தா அமர்ந்தார்கள். உறுதியாகச் சுவாமிகள் இருக்கமாட் டார்கள் என்ற துணிவுடன் சென்றோமாத லால் குடிலின் வாயிலை நெருங்குகின்ற வரையில் பேசிக்கொண்டே சென்றோம். மூவரும் நுழைந்தவுடன் மிகப் பெரிய அதிர்ச்சிக்கு ஆளானோம். நாங்கள் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. பேசவும் முடியவில்லை. அந்த நிலையிலும் அரு ளாளர் "பொடியா உன்னுடைய இடத்தில் வந்து இருக்கட்டும்" என்றார்கள். நண்பர் ஸ்ரீகாந்தாவும் அவர் மனைவியும் சுவாமிகள் கூட ஆடி வேலுக்குப் போகவில்லை என்பதைக் கண்டு ஒன்றும் புரியாமல் நின்றார்கள். சுவாமிகள் அவர்களைப் பார்த்து "ஏன் மகனே! நீ ஆடிவேலுக்குப் போக வில்லையா?" என்று கேட்டார்கள். நண்பர் ஸ்ரீகாந்தா கண்ணீர் ஆறாகப் பெருக வாய்குழறி அரசு ஆணை காரண மாகத் தாம் யாழ்ப்பாணத்தில் தங்க நேரிட்டது என்று சொல்லி அழுதார்கள்.

உடனே சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். "கவலை வேண்டாம்; மகனே நமக்கென்ன வாகனமா இருக் கிறது? அந்த மடையனுக்குத்தான் மயில் வாகனமிருக்கிறது. வேண்டுமானால் அவன் தான் நம்மிடம் வரவேண்டும் நாமெங்கே போவது?" என்று சொல்லி விட்டுச் சிரித்துக் கொண்டே பாட ஆரம்பித்து விட்டார்கள். ஒரு மணி நேரம் இங்கே தங்கிய பிறகு சுவாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பி னோம். வரும்பொழுது நண்பர் ஸ்ரீகாந்தா சொல்லியது இன்றும் என கவனத்தில் உள்ளது. "அ.ச.ஐயா! பல ஆண்டுகளாகத் தவறாமல் ஆடிவேலுக்குக் கதிர்காமம் செல்கிற நான் இந்த ஆண்டு போக முடியவில்லையேயென்று வருந்தினேன். ஆனால் சுவாமிகளும் போகவில்லை என்பதை இப்பொழுது கண்டுவிட்டோம் என்ற எண்ணம் மனதில் நிறைந்துவிட்டது" என்றார். அவரைத் தரிசித்ததால் கதிர் காமத்தானைத் தரிசித்து விட்டோம்.

இரண்டு நாட்கள் கழித்துக் கொழும் பிற்குச் சென்றேன். அங்கு ஐந்து நாட்கள் பேச ஏற்றுக் கொண்டிருந்தேன். முதல் நாள் போயிறங்கியவுடன் வழக்கம் போல் சேர் கந்தையா வைத்தியநாதன் உட்படப் பலர் விமான நிலையம் வந்திருந்தனர். அன்று மதியம் செய்தி விளம்பரத்துறைச் செயலாளர் வீட்டில் மதிய உணவிற்கு ஏற்பாடாகியிருந்தது. சாப்பிடுவதற்கு முன் அவர் "ஆடிவேல் விழாவைச் சினிமா எடுத்திருக்கிறோம். பாரக்கிறீர்களா" என்று கேட்டார். நான் சரி என்றவுடன் யன்னல்களையெல்லாம் மூடிவிட்டு 14mm புரஜெக்டர் (Projector) கருவி வைத்து மூன்று நாட்கள் முன்னர் நடந்த ஆடிவேல்

விழாவில் எடுத்த படத்தைப் போட் டார்கள். சில நிமிடங்கள் கழிந்தவுடன் என் மூச்சே நின்றுவிடும் போல் ஆகிவிட்டது. காரணம் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீகாந்தா உட்பட எங்கள் மூவரிடமும் ஒரு மணி நேரம் காட்சி தந்த யோகசுவாமிகள் அதே நேரத்தில் கதிர்காமத்தில் ஒலிவாங்கி யின் முன்னர் பேசுவதை அந்தச் செய்திப் படம் காட்டிற்று. அதிர்ந்து போன நான் செயலாள நண்பரைப் பார்த்து "இது என்ன பழையபடம் இதைப் போட்டுக் காட்டி னீர்களே" என்றேன். அதை மறுத்த அவர் முந்தநாள் எடுத்தது தான் இது என்பதற்கு அத்தாட்சியாக அந்தப் படச்சுருளை வைக்கும் தகர டப்பாவின் மேல் எழுந்தி யிருந்ததைக் காட்டினார். எப்பொழுது எடுக்கப்பட்டது, எந்த மணியிலிருந்து எதுவரை என்றெல்லாம் அதில் எழுதி யிருந்தது.

பொறுமையிழந்த நான் உடனே தொலைபேசி மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீகாந்தாவுடன் தொடர்பு கொண் டேன். நான் எவ்வளவு எடுத்தக்கூறியும் ஸ்ரீகாந்தா நம்பமறுத்துவிட்டார். "அ.ச.ஐயா! நாம் மூன்று பேரும் சுவாமிகளிடம் ஒரு மணி நேரம் இருந்ததையும் அவர் சொன்ன மொழிகளைக் கேட்டதையும் நன்றாக அறிவோம். "நமக்கென்ன வாகனமா இருக்கிறது இருக்கிறது அந்த மடையனுக்குத்தான் மயிலிருக்கிறது" என்று கூறியது நினைவில்லையா? என்று கேட்டார். எவ்வளவு சொல்லியும் நண்பர் ஸ்ரீகாந்தா படச்சுருளை நம்பத் தயாராக வில்லை. அரசுப் பணியாளர்கள் ஏதோ தவறு செய்துவிட்டார்கள் என்றே உறுதி யாக நம்பினார். இந்நிலையில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். ஐந்துநாள் சொற் பொழிவு முடிந்தது. கொழும்பிலிருந்து நேரே சென்னை வருவதற்கு என்னிடம் பயணச் சீட்டிருந்தாலும் அதை மாற்றி யாழ்ப்பாணத்தில் ஒரு நாளைத் தங்கிச் செல்லமுடிவு செய்தேன். அன்று கூட்டத் திற்கு வந்திருந்த பலரும் கதிர்காமம் சென்று மயில்வாகன முருகனையும் மானுட வடிவில் யோகசுவாமிகள் என்ற பெயரில் இருந்த முருகனையும் கண்ட வர்கள் ஆவர். சுவாமிகள் அங்கு பேசியதை இவர்களனைவரும் நேரே கேட்டவர்களாதலால் அவர்கள் என்னை நம்பத் தயாராக இல்லை.

இந்த நிலையில் என் பணி முடிந்த வுடன் ஆறாம் நாள் புறப்பட்டு யாழ்ப் பாணம் வந்தேன். விமான நிலையத்திற்கு வந்த ஸ்ரீகாந்தா இது பற்றி அவசரமாக என்னுடன் பேசவிரும்பியதால் ஓட்டுனரை விட்டுவிட்டுத் தானே வண்டியை ஓட்டி வந்திருந்தார். பலாலி விமான நிலை யத்திலிருந்து கலெக்டர் பங்களா செல்லும் வரையில் நடந்தவற்றை யெல்லாம் கூறினேன். நண்பர் ஸ்ரீகாந்தா அவர்கள் உறுதியாக அந்தச் சினிமாப் படம் பழைய படம் என்ற முடிவிலிருந்து மாறவேயில்லை. அன்று மாலை நாங்கள் மூவரும் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றோம். விழுந்து வணங்கியவுடன் சுவாமிகள் "பொடியா நீ ஏன் பட்டணம் போகாமல் இங்கே வந்தாய்?" என்றவுடன் நான் அச்சத்தோடு நடந்தவற்றைக் கூறினேன். சுவாமிகள் கடகடவென்று சிரித்துவிட்டு "அந்த மடையனுக்குத்தான் மயிலிருக்கிறது, நாங்கள் எப்படி அங்கே போகமுடியும்? மயிலா நமக்கிருக்கிறது? என்று கூறிச் சிரித்தார். அட்டமா சித்திகளில் வேறொருவர் காணாமல் ஒரே நேரத்தில்

பல இடங்களில் இருக்கும் சிறப்பு சித்தர் களுக்குரியது என்பதைப் படித்திருக் கிறேன். ஆதலால் மனத்தில் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "சுவாமிகள் அங்கே இருந்ததும் உண்மை. இது அட்ட..." என்று தொடங்கினேன். அந்த வார்த்தையை முழுதும் கூறவிடாமல் சுவாமிகள் உரத்த குரலில் "பொடியா! செருப்படி வேண்டுமோ உனக்கு? வாயை மூடடா? என்றார்கள். பிறகு அன்பொழுகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மறுநாள் நான் சென்னை மீண்டுவிட்டேன். யோக சுவாமிகள் எல்லாம்வல்ல சித்தர் என்ப தற்குத் தலையாய எடுத்துக்காட்டு இதுவாகும்.

என் நினைவில் ஆழமாக நின்ற மற்றொரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். ஒரு முறை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சொற்பொழிவு ஆற்று வதற்காகப் பல்கலைச் செல்வர் டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் டி.எம்.பி.மகாதேவன், நான் ஆகிய மூவரும் சென்றிருந்தோம். அமைச்சர் நடேசன் அவர்கள் வீட்டில் தங்கியி ருந்தோம். திரு.தெ.பொ.மீ.யும் நானும் சுவாமிகளிடம் செல்லும் வாய்ப்பை முன்னரே பெற்றிருந்தோம். திரு.மகா தேவனுக்கு இது புதிய அனுபவம். நான்கு நாட்களும் சொற்பொழிவுகள் முடிந்த வுடன் சுவாமிகளிடம் சென்று ஒரு மணி நேரம் தங்கி அவர்கள் ஆசீர்வாதத்துடன் திரும்புவது வழக்கம். முதல் மூன்று நாட்களிலும் பல திருவிளையாடல் களைச் சுவாமிகள் செய்தருளினார்கள். திரு.மகாதேவன் ஏதாவது பலகாரம் செய்து சுவாமிகளுக்கு நைவேத்திய மாகப் படைத்துவிட்டு அந்த உச்சிஷ் டத்தை நாங்கள் உண்ணவேண்டும் என்று விரும்பினார். அமைச்சர் நடேசனாரிடம் இதைச் சொல்ல அவர் சமையற்காரனை அழைத்து "ஏழு அல்லது எட்டு மணிக்குக் குளித்துச் சுத்தமாக இடியப்பமும் சொதியும் தயார் செய்துவை" என்று உத்தரவிட்டார். மகாதேவனிடம் திரும்பி "உங்கள் ஆசைக்காக இதனைச் செய்யச் சொல்லிவிட்டேன்" சுவாமிகள் எதையும் வாயில் போட்டு நானறியேன். இருந் தாலும் இப்பலகாரத்தை எடுத்துக் கொண்டு சென்று உங்கள் விருப்பத்தை விண்ணப்பம் செய்யுங்கள். சுவாமிகள் மறுத்துவிட்டால் அதற்காக வருந்த வேண்டாம்" என்று கூறினார் நடேசனார்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நான்கு மணிக்கு அமைச்சர் உட்பட நால்வரும் கல்லூரிக்குப் புறப்படத் தயாராக இருந்தோம். சமையற்கார னுக்குத் திடீரென காக்கை வலி கண்டு விட்டது. அவனை மருத்துவனைக்கு அனுப்பிவிட்டு நாங்கள் சொற்பொழி வுக்குச் சென்றுவிட்டோம். எங்களுக்கே உணவில்லாத போது சுவாமிகளுக்கு நைவேத்தியம் கொண்டு செல்வதென்பது நடக்காமல் போய்விட்டது. எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை என்ற மன வருத்தத்துடன் பத்து மணியளவில் நாங்கள் மூவரும் சுவாமிகளிடம் சென்று வீழ்ந்து வணங்கிவிட்டு நின்றோம். திடீரென சுவாமிகள் "அடே மகாதேவா! யோகனுக்குச் சாப்பாடு போடவேண்டு மென்று நினைத்தாயல்லவா கலைப் படாதே" என்று கூறிவிட்டு மூவரையும் அமருமாறு செய்தார்கள். திடீரென குடிசையில் ஒரு மூலையைச் சுட்டிக்காட்டி "டேய் பொடியா! அங்கு இடியப்பமும்

சொதியும் இருக்கிறது. நான்கு இலைகள் இருக்கின்றன. எடுத்துப் போடு" என்றார்கள். சுவாமிகளுக்குப் படைக்கப்பட்ட இலகளிலிருந்து இடியப்பத்தை நன்கு பிசைந்து கடுகளவு தம்முடைய திரு வாயில் போட்டுக்கொண்டு எஞ்சிய வற்றை உருண்டைகளாக உருட்டி எம் மூவர் இலைகளிலும் போட்டு உண்ணு மாறு பணித்தார். இவை முடிந்த பிறகு திடீரென "டேய் மகாதேவா! நீ என்ன செய்யப்போகிறாய் நாளைக்கு?" என்றார்கள். அவர் தெ.பொ.மீ.யும் தாமும் மறுநாட் காலை விமானத்தில் சென்னை செல்லப்போவதாகக் கூறினார்கள். நான் கொழும்பு செல்லப் போவதாகக் கூறினேன். சுவாமிகள் சிரித்துக் கொண்டே "அடே பொடியா! இவர்கள் இருவரும் பறவை மாதிரி கைகளை இறக்கையாகப் பரப்பிக்கொண்டு பறக்கப் போகிறார்கள் தெரியுமா?" என்றார்கள். எங்கள் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது. இவர்களைப் போக வேண்டாமென்று சுவாமிகள் கூறுகிறார்களோ என்ற சந்தேகம். சுவாமிகள் எதிரே வருகின்ற பெரியவர்கள் பிரதம மந்திரியிலிருந்து சாதாரண மனிதர் வரை யாரும் பேசுவ தில்லை. தொடக்கத்திலிருந்தே அவர்கள் எதிரே பேசும் உரிமையை எனக்கு வழங்கியிருந்தார்கள். நான் பேசாது இருந்தாற்கூட "டேய் பொடியா! ஏன் சும்மா இருக்கிறாய்" ஏதாவது சொல்" என்பார்கள். அந்த உரிமையை வைத்துக் கொண்டு "இப்பொழுது இவர்கள் பயணத்தை நிறுத்தி விடட்டுமா"? என்று கேட்டேன். சுவாமிகள் சிரித்துக்கொண்டே "அவர்கள் போவதை யோகன் ஏன் நிறுத்த வேண்டும். பறவை போலப் பறப்பார்கள்" என்று கூறினார்கள். சுவாமிகளை விட்டு வரும் போது நடுநிசி ஆகிவிட்டது. நடந்த வற்றைக் கூறியவுடன் அமைச்சர் நடேசனார் இவர்களைப் போக வேண்டாம் என்று எவ்வளவோ கூறிப்பார்த்தார். இருவரும் கேட்பதாக இல்லை. வேறு வழியில்லாமல் மறுநாட் காலை ஏழேகால் மணிக்கு இவர்கள் இருவரையும் வழியனுப்ப அமைச்சரும் நானும் சென்றோம். இரு வரும் விமானத்தில் ஏறி அமர்ந்துவிட்டனர். ஓடு பாதையின் தொடக்கத்திற்குச் சென்ற விமானம் பலமுறை விசிறிகளைச் சுழல விட்டுக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. அது டக்கோட்டா விமானம் சிறிது நேரத்துக்கு எல்லாம் ஒலி பெருக்கியில் பின்வருமாறு பேசப்பட்டது. "விமானம் பழுதடைந்துவிட்டதால் இன்று சென்னை செல்லும் வாய்ப்பு இல்லை. நாளை இதே நேரத்திற்கு இதே பயணச் சீட்டுக்களுடன் பயணிகள் வரலாம்" என்று கூறிவிட்டு விமானத்தைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தார்கள். தெ.பொ.மீயும் மகாதேவனும் கீழ் இறங்கினார்கள். அமைச்சர் நடேசனுக்குப் பெரிய ஆனந்தம். மகாதேவனுக்கு வருத்தம். வழக்கம் போல் அன்று மாலை சுவாமியைக் காணச் சென்றோம். சுவாமிகள் சிரித்துக் கொண்டே "என்னடா மகாதேவா! இறக் கையை விரித்து பறக்கவில்லையோ!" என்றார்கள். மகாதேவன் அவர்கள் கண்ணீர் ததும்ப விழுந்து வணங்கிவிட்டு தான் அவசரப்பட்ட காரணம் கூறினார். "அன்று சென்னை போயிருந்தால் நான் இரவு டில்லி சென்று T.W.A. விமானம் மூலம் ஹவாய்த் தீவில் (Hawai Island) உள்ள ஆனலூலுக்கு (Honululu) செல்ல வேண்டும். அதற்கு மறுநாள் அங்கு நடைபெறப் போகும் அகில உலக வேதாந்த மாநாட்டிற்கு நான் தலைமை வகிக்

வேண்டும். எல்லாம் கெட்டுவிட்டது" என்று வருந்தினார். அதைக் கேட்ட சுவாமிகள் "கவலை வேண்டாம் மகனே! இந்த மாநாட்டை 15 நாள் தள்ளிப்பொட்டு விட்டார்கள். நீ அமைதியாகச் சென்று தலைமையேற்று நடத்தலாம்" என்று கூறினார்கள். சுவாமிகளிடம் விடைபெற்று வந்த நடேசன் வீட்டில் தங்கியபோது மகாதேவன் கூறிய வார்த்தைகள் அவர் துயரத்தை எடுத்துக் காட்டின. "இந்த மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஒரு வருடத்திற்கு முன்பே அட்டவணை போட்டு தயாரிக்கப் பட்டவை ஆகும். உலகம் முழுவதிலும் இருந்தும் பலர் வருவார்கள். ஆகையால் இரண்டு நாள் முன்னர் இதை மாற்றுவது இயலாத காரியம்" என்று வருந்தினார். மறுநாள் அவர்கள் இருவரும் சென்னை சென்றார்கள். நான் கொழும்பு சென்று 15 நாட்கள் தங்கிவிட்டு சென்னை வந்து 1 மாதம் கழித்த பின் டாக்டர மகாதேவனைச் சந்தித்தேன். நாத் தழுதழுக்க "சுவாமிகள் அவர்கள் எவ்வவளவு பெரிய சித்தர் என்பதை அனுபவத்தில் அறிந்து விட்டேன். அங்கே விமானம் தடைப்பட்ட அதே நேரத்தில் சென்னையில் என் வீட்டிற்கு ஒரு தந்தி வந்திருந்தது. பதினைந்து நாட்கள் மகாநாடு பல்வேறு காரணங் களினால் தள்ளி வைக்கப்பட்டதென்றும் பதினாறாவது நாள் விழா தொடங்கு மென்றும் தந்தியில் அறிவித்திருந் தார்கள். அப்படியே பதினாறாவது நாள் தொடங்கிய விழாவில் தலைமை ஏற்று என்பணி முடித்து வந்து விட்டேன்" என்று கூறினார்கள். யோக சுவாமிகள் என்ற சித்தரிடம் நாங்கள் அனுபவித்த இந்த நிகழ்ச்சி அவர் யார் என்பதை எடுத்துக் காட்ட உதவும்.

மேலே கூறிய இரண்டு நிகழ்ச்சிகளிலும் உடனிருந்து சுவாமிகளின் யோக சித்தியை யும், பக்தர்களுக்கு அருள்கின்ற திறத்தை யும் என்னால் காணமுடிந்தது. இனி நான் சொல்லப்போகும் நிகழ்ச்சி எனக்கு நேரடியாக நேர்ந்த அனுபவமாகும். சுவாமிகள் இருக்கும் காலத்திலேயே இது பற்றி எழுத வேண்டுமென்று ஈழகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகள் வேண்டி யும் மகானின் உத்தரவில்லாமல் அதைச் செய்யமுடியாது என்று கூறிவிட்டேன். இப்போது அதனை எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது அப்பெரு மானார் முத்தியடைந்து விட்டார். இரண்டாவது என்னுடைய வயதும் எண்பதைக் கடந்துவிட்ட காரணத்தால் பின்னர் வரும் சமுதாயம் எத்தகைய அருளாளர்களை இந்தத் தமிழினம் பெற்றிருந்தது என்பதை அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆதலால்தான் இதனை விரிவாக எழுத முற்பட்டேன்.

1955 வாக்கில் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள கரணவாய் தெற்கு என்ற ஊரில் பத்து நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு செய்வதாக ஒப்புக்கொண்டு சென்றேன்.

மலாய்நாட்டு ஓய்வூதியம் பெறும் முருகப்பு என்பவர் வீட்டில் தங்கியி ருந்தேன். பகல் முழுவதும் வேலை யில்லை ஆதலாலும், இரவில் சொற் பொழிவு தொடங்குவதாலும் அன்பர்கள் சிலர் எனக்காக ஒரு காரைக் கொடுத்து பகலில் எங்கு வேண்டுமானாலும் போய் வர ஏற்பாடு செய்தார்கள். முதல்நாள் சொற்பொழிவு முடிந்து வழக்கம் போல் சுவாமிகளிடம் சென்று வணங்கி வழிபட்டு இரவு மீண்டுவிட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் பல்தேய்த்துக் கொண்டு நின்றேன். நண்பர் முருகப்பு வழக்கமாய்க் கேட்கின்ற "நன்கு உறங்கினீர்களோ ஐயா" என்ற கேள்வியைக் கேட்டார். அவருக்குப் பதில் கூறத் தொடங்கினேன். ஆனால், வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. காற்றுத் தான் வெளிவந்தது. எவ்வளவு முயன்றும் ஒரு எழுத்தைக்கூட உச்சரிக்க முடியவில்லை. அதிர்ந்து போன நான் என் செய்வது என்றறியாமல் திகைத்தேன். ஒன்பது மணியளவில் காரை நானே ஓட்டிக்கொண்டு சாவகச்சேரியில் ஓய்வு பெற்றிருந்த தொண்டை, காது, மூக்குநோய் நிபுணர் மருத்துவரைக் காணச் சென்று, என் குறையை அவரிடம் எழுதிக் காட்டினேன். அவர் சோதனை செய்துவிட்டு "இன்று மாலை உங்களுடன் ஒருவரை அனுப்பு கின்றேன். கொழும்பில் சென்று சில சோதனைகள் நடத்திய பிறகு மருத்துவம் செய்யலாம்" என்று கூறினார். அவரிடம் எழுதிக் காட்டும் பொழுது Paralysis of Vocal chord என்று எழுதிக் காட்டினேன். அவருடைய வாக்கை ஏற்றுக் கொண்டு மாலை கொழும்பு போவதற்குத் தயாராக காரில் ஏறி அமர்ந்தேன். கண்ணீர் மாலை மாலையாக வந்தது. காரணம் என் பிழைப்பே வாயின் மூலம்தான் நடை பெற்றது. கல்லூரிப் பேராசிரியர், தொடர்ந்து சொற்பொழிவு செய்பவர் என்ற இரண்டும் போய்விட்டனவே! என்னுடைய பெரிய குடும்பம் என்னாவது என்ற கவலை மனம் முழுவதையும் சூழ்ந்து கொண்டது. இந்த நிலையில் காரை ஆயத்தப்படுத்தச் சாவியைச் செருகிய நிலையில அந்த மருத்துவ நிபுணர் வெளியே வந்து காரின் கதவைப் பிடித்துக் கொண்டு, "அ.ச.ஐயா! யோகருடைய சீடர் தானே தாங்கள்? அவரைப் போய்ப் பாருங்களேன் என்றார். அந்த விநாடிவரை சுவாமிகள் நினைவே என் மனதில் தோன்றவில்லை. அவர் கூறியவுடன் சுவாமிகளிடம் செல்லப் புறப்பட்டேன். அக்காலத்தில் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை. மாலை ஆறு மணிக்கு மேல் தான் செல்வார்கள். அனைவருக்கும் தெரிந்த இந்தச் செய்தி எனக்கும் தெரிந்திருந்தது. எனவே, ஒரு விநாடி சிந்தித்து, உடனடியாகச் சுவாமி களிடம் போவதே சரி என்ற முடிவிற்கு வந்தேன். நேரே வண்டியை ஓட்டிச் சென்று ஆச்சிரமத்தின் பக்கத்தில் நிறுத்திவிட்டு, எதிரே உள்ள கேணியில் கைகால்களைச் சுத்தம் செய்து மகானின் குடிலுக்குள் நுழைந்தேன். அடக்கமுடியாத அழுகையும், கண்ணீரும் என்னை ஆட்கொண்டிருந்தன. விழுந்து வணங்கிய நான் எழுந்திருக்க விரும்பவில்லை. ஓரிரு நிமிடங்கள் கழித்து "ஏண்டா பொடியா. அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்பா? எதற்காக அவரிடம் போனாய்?" என்று திட்டியதோ டல்லாமல் என்னுடைய அறியாமை பற்றியும் வெகுவாக ஏசினார்கள். கடைசியில் "பொடியா! இங்கே உட்கார்" என்று நான் வழக்கமாக அமரும் இடத்தைக் காட்டி னார்கள். அப்பொழுது இருந்த மனநிலையில் சுவாமிகள் பேசியது எதுவும் என் மனத்திற் படியவில்லை. ஏதேதோ பேசிவிட்டு அரைமணி கழித்து அவர்கள் சொல்லிய வார்த்தைகளை ஏறத்தாழ அப்படியே கீழே தந்துள்ளேன். ஒரு சில சொற்கள் முன் பின்னாக இருக்கலாம். இத்தனை ஆண்டுகள் கழித்தும் அச்சொற்களை மறக்க முடிய வில்லை. காரணம் என்னுடைய வாழ்க்கையில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சொற்கள் அவை. "பொடியா! வழக்கம் போல் மாலையில் பிரசங்கம் செய்துவிட்டு இங்கே

வா" என்று கூறிய சொற்கள் ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தன. அப்படியானால் நான் பேசமுடியும் என்பதைச் சுவாமிகள் குறிப்பாக உணர்த்தி விட்டார்கள் என்று உணரத் தொடங்கினேன். எழுந்து விழுந்து வணங்கிவிட்டு "உத்தரவுப்படியே செய்கிறேன்" என்றேன். இந்த இரண்டு வார்த்தைகள் தான் அப்பொழுத என் வாயிலிருந்து வந்த புதிதாகப் பிறந்த முதலிரண்டு சொற்கள் ஆகும். அந்தச் சித்தபுருஷன் எதிரே என்னை மறந்து நான் நிற்கும் போது திடீரென்று சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். "பொடியா, சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்கவேணும், கவலையில்லாமல் போய் வா என்றார்கள். இதன் பொருள் என்ன என்பதைப் பின்னர் விளக்குகிறேன். வெளியில் வந்து காரை ஓட்டிக் கொண்டு சுவாமிகளிடம் என்னைப் போகுமாறு பணித்த அந்த மருத்துவப் பெருந்தகையைக் காணச் சென்றேன். தெருவிலிருந்தபடியே "டாக்டர்..." என்று பெருங் குரலெடுத்துக் கூவினேன். இந்த முதியவர் வீட்டினிலிருந்து வெளியே வந்து நடுத்தெருவில்சாஷ்டாங்கமாக விழுந்து என்னை வணங்கினார். சற்றும் எதிர்பாராத இதனைக் கண்ட நான், பெரிதும் அதிர்ச்சி யடைந்து "இவ்வளவு முதியவராகிய தாங்கள் என்னைக் கும்பிடலாமா? இது முறையன்று" என்று கூறினேன். என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு அவர், உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தார். அதேநேரம் அவர் பணியாளர் ஒருவர் இரண்டு விமான டிக்கட்டுக்களைக் கொண்டு வந்து அவரிடம் தந்தார். ஏதோ அவருக்கு அந்த டிக்கட்டு என்று நினைத்தேன். அப்பெருமகனார் டிக்கட்டை என்னிடம் கொடுத்தப் படிக்கச் சொன்னார். யாழ்ப் பாணத்திலிருந்து சென்னை செல்வதற்கு என் பெயரிலும், அப்பணியாளர் பெயரிலும் இரண்டு டிக்கட்டுக்கள் இருந்தன. ஒன்றும் புரியாமல் திகைக்கும் என்னைப் பார்த்து பின்வருமாறு பேசினார். "அ.ச.ஐயா! இங்கு செய்த சோதனையிலே தாங்கள் எழுதிக் காட்டியது உண்மை என்பதைத் தெரிந்து கொண்டேன். இதற்கு இதுவரை மருத்துவ உலகம் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோடிக்கு ஒருவருக்கு இது வரலாம். வந்துவிட்டால் அதுதான் அவருடைய முடிவு. ஆக உங்களிடம் சொல்லாமல் நாளைக்கு உங்களைச் சென்னைக்கு அனுப்ப முடிவு செய்தேன். பேசமுடியாத தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் இந்த அன்பரையும் உங்களோடு அனுப்ப முடிவு செய்தேன். காரில் உங்களை ஏற்றுகின்ற வரை எனக்கும் சுவாமிகளின் நினைவு வரவில்லை. எப்படி உங்களை ஊருக்க னுப்புவது என்ற எண்ணம் தான் என் மனத்தில் மேலோங்கி நின்றது. தாங்கள் வண்டியில் ஏறிய பிறகு வண்டிக் கதவைத் தொட்டுக் கொண்டு "நீங்கள் சென்று வாருங்கள்" என்று விடை கொடுக்க முயலும் போதுதான் சுவாமிகளின் எண்ணம் திடீரென்றுமனத்தில் தோன்றியது. நாற்பது வருடங்களுக்கு மேல் E.N.T மருத்துவராகக் கொழும்பில் பணி செய்த எனக்கு அந்த விநாடி ஓர் எண்ணம் தோன்றிற்று. மருத்துவ உலகம் உதவ முடியாத தங்களுக்கு இறை வனின் அருள் ஒன்றுதான் உதவமுடியும். அப்படியானால் அந்த அருளை வழங்கக் கூடிய இறைநேசர் சுவாமிகள் ஒருவராகத் தான் இருக்க முடியும். அதனால்தான் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை யென்று தெரிந்திருந்தும் தங்களைப் போகுமாறு பணித்தேன். சுவாமிகளே என்மனத்தில் அந்த எண்ணத்தைத் தோற்று வித்திருக்க வேண்டும். இத்தகைய அற்

புதங்கள் பலவற்றைப் பிறர் அறியாமல் ஒரு சிலருக்குச் சுவாமிகள் செய்கிறார்கள் என்பதை தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, என்னை அங்கேயே தங்கி "மதிய உணவு உட்கொண்ட பிறகு போகலாம்" என்றும் பணித்தார்கள்.

அன்று மாலை வழக்கம்போல் பேசினேன். பின்னர் சுவாமிகளிடம் சென்று ஆசி பெற்றேன். ஏனைய ஒன்பது நாட்களும் இதே முறையில் சுவாமி களைச் சென்று தரிசனம் செய்து வந்தேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தில் கம்பனைப் பற்றி "இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் என்ற நூலையும், "நாடும் மன்னனும்" என்ற நூலையும் எழுதி வெளியிட்டிருந்தேன். அதன் பிறகு ஏறத் தாழ முப்பது நூல்கள் எழுதியுள்ளேன். என்றாலும் சுவாமிகளின் வாக்குப் பொய்க்கவில்லை. இந்நூல்களில் முக்கால் பங்கிற்கு மேல் கம்பனையும் சேக்கிழா ரையும் பற்றிய நூல்களே ஆகும். இவற்றோடு இல்லாமல் எஸ். ராஜம் அவர்கள் வெளியிட்ட கம்பராமாயண மூலத்திற்கு ஆசிரியர் குழுவில் ஒருவனாக இருந்தேன். அடுத்துச் சென்னைக் கம்பன் கழகம் வெளியிட்ட "கம்ப இராமா யணம்" பதிப்பிற்குப் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ அவர்களுடன் சேர்ந்து பணியாற்றினேன். 1993 முதல் கோவைக் கம்பன் கழகம் வெளியிடும் இராமாயண நூலுக்கும் முதன்மைப் பதிப்பாசிரியனாக இருந்து வருகின்றென். தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த முனைவர் வி.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் எதிர்பாராத விதமாக என்னை அழைத்துச் சேக்கிழாரைப் பற்றிய விரிவான நூலொன்றை எழுதுமாறு பணித்தார்கள். மூன்று ஆண்டுகள் பல்கலைக்கழகத்தின் ஏற்புப் பணியாக "பெரிய புராணம் ஓர் ஆய்வு" என்ற பெரியதொரு நூலை எழுதி முடித்தேன்.

1996இல் என்னுடய எண்பதாவது வயது நிறைவு நாளில் இராமனைப் பற்றிப் புதிய கோணத்தில் ஒரு நூல் எழுதுமாறு "தானசூர கர்ணன்" திரு.ஆர்.துரைசாமி நாயுடு அவர்கள் (கோவை) பணித் தார்கள். "இராமன் பன்முக நோக்கில்" என்ற நூலை எழுதினேன். திரு.நாயுடு அவர்கள் தம் செலவில் அதை வெளி யிட்டார்கள். புராணத்தைப் பக்தி அடிப்படையில் இல்லாமல் சமுதாய அடிப்படையில் காணவேண்டுமென்ற எண்ணம் மனத்தில் தோன்றியதுண்டு. அதற்கு வடிவு கொடுக்கத் தொடங்கி 1997 ஜூலையில் "சேக்கிழார் தந்த செல்வம்" என்ற நூலை வெளியிட்டேன்.

நூல்கள் எழுதும் பழக்கமுடைய நான், இவை இரண்டையும் எழுதியதில் என்ன புதுமை என்று பலர் நினைக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை யோகசுவாமிகள் இட்ட கட்டளை என்று ஒவ்வொரு விநாடியும் நினைக்கின்றேன். என்ன காரணத்தாலோ சென்ற நாற்பது ஆண்டுகளாக இவ்விருவரையும் தாண்டி வெளியே செல்ல முடியவில்லை. தொல் காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள, மெய்ப்பாட்டியல், உவமையியல் என்ற இரண்டிற்கும் புதிய முறையில் பேராசிரி யருடன் மாறுபட்டு உரை எழுதும் எண்ணம் பல்லாண்டுகளாக இருப்பினும் ஏனோ எழுதமுடியவில்லை. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் திருவாச கத்திற்கு என்னால் ஓர் உரை எழுதப்பட

வேண்டும் என்று பலமுறை என்னிடம் கூறியதோடு அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலும் இதனை எழுதியுள்ளார்கள். என்ன காரணத்தாலோ 1997 வரை அதுவும் முடியவில்லை. எண்பது வயது பூர்த்தியாகும் போதும் இராமனைப் பற்றியும், சேக்கிழார் பற்றியுமே அடுத்தடுத்து இரண்டு பெரிய நூல்களை எழுதி வெளியிட முடிந்ததென்றால், அதன் உண்மையான காரணம் அ.ச.ஞா. என்ற தனிமனிதனுடைய முயற்சியோ, விருப்பமோ அல்ல. எந்தவிநாடி அந்த மகான் வாயைத் திறந்து "அந்த இருவரையும் வெட்டிப் புதைக்க வேண்டும்" என்று சொன்னார்களோ, அந்த விநாடியி லிருந்து அதே பணி என்னையும் அறியாமல் நடந்துகொண்டிருக்கிறது.

எண்பது வயதைக் கடந்தாலும் என்னுடைய குரல் வளத்தைக் கண்டு வியப்படைந்து "எப்படி உனக்கு இந்த குரலிருக்கிறது" என்று என்னிடம் கேட்ப வர்கள் பலருண்டு.இதற்காக நான் ஏதோ தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்து கொள்கிறேனோ என்றும், குரலை நெறிப் படுத்தும் (Voice Culture) முறை கையாள் கின்றேனோ என்றும் பலர் என்னிடம் கேட்டதுண்டு. எவ்விதக் கட்டுப்பாடு மில்லாமல் கண்டதையெல்லாம் உண்டு வாழும் எனக்கு, இந்தக் குரல் இன்னும் இக்கிறதென்றால் அது என்னுடையதன்று. அரசங்குடி சரவண முதலியாருக்கு 1916 இல் மகனாகப் பிறந்து நான் பெற்றிருந்த குரல் யாழ்ப்பாணத்தில் 1955இல் இழக்கப்பட்டது. அந்த சித்த புருஷரைச் சந்தித்த பிறகு இன்றுவரை நான் பேசும் குரல் அப்பெருமகனார் இட்ட பிச்சை யாகும். எனவே, இதில் ஆச்சரியப்படு வதற்கோ, பெருமை அடைவதற்கோ, ஒன்றுமில்லை. இத்தகைய மகான்களின் திருவருள் எத்தகையவர்களையும் காக்கும் திறன் உடையது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலே கூறிய மூன்று நிகழ்ச்சிகளும் என்னோடு நேரடித் தொடர்புடையவை. இனிக் கூறப்போகும் நிகழ்ச்சிக்கும் எனக்கும் நேரடித் தொடர்பில்லை. சுவாமிகளிடம் மாபெரும் பக்தி பூண்டி ருந்த யாழ்ப்பாண நண்பரொருவர் அவருடைய வாழ்க்கையில் நடந்ததைக் கூறினார். அதைப் பிறரிடம் சொல்லும் பழக்கம் அவரிடமில்லை. ஆனால் என் அனுபவங்களை அறிந்த பிறகு அவ ருடைய அனுபவத்தை என்னிடம் சொல் வதில் தவறில்லை என்று கருதிக் கூறினார். இப்போது பெரிய பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அந்த நண்பரும இல்லை. சுவாமிகளும் இல்லை. எனவே நண்பர் கூறியதை அப்படியே தருகின்றேன். "அ.ச.ஐயா! சுவாமிகளின் மாபெரும் ஆற்றலுக்குள் ஓர் உதாரணம் சொல்லப் போகின்றேன். மனசுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். பிறரிடம் இது பற்றிப் பேசத் தேவையில்லை. ஒரு முறை யாழ்ப்பாணம் சென்று சுவாமிகளைத் தரிசித்தபொழுது சிரித்துக்கொண்டே "மகனே சிவனொளிபாதம் போய் வர லாமோ" என்று கேட்டார். நான கொஞ்சம் அஞ்சினேன். மலையின் மேலிருக்கும் அந்த இடத்திற்குச் செல்வதற்குச் சரியான பாதையொன்றும் அப்பொழுது இல்லை. பாறைகளைக் கடந்து தாண்டிக் கொண்டு செல்ல வேண்டும். சுவாமிகளோ முதிர்ந்த பருவத்தினர். என்ன செய்வது என்று திகைத்து இறுதியில் ஒப்புக் கொண்டேன்.

அந்த மலையின் மேல் ஏறிச் செல்வ தானால் போக வரவே பல மணிகள் ஆகும். வழியில் சாப்பிடுவதற்கு ஒன்றும் இராது. எனவே, சுவாமிகள் குறித்த நாளில் ஒரு சட்டி நிறைய இடிப்பமும், சொதியும் தயார் செய்து காரின் பின்புறம் வைத்துவிட்டுச் சுவாமிகளும் நானும் மலையடிவாரம் போய்ச் சேர்ந்தோம். அங்கே காரிலிருந்து இறக்கிய இரண்டு பாத்திரங்களையும் பார்த்து "என்ன மகனே இது" என்று கேட்டார்கள். "மதிய உணவிற்காக" ன்று நான் கூறியவுடன் கடகட வென்று சிரித்த சுவாமிகள் "போகும் வழியில் பாதி தூரத்தில் அழகான டீக் கடை இருக்கிறது. வேண்டுமான பண்டங் களை வாங்கிச் சாப்பிடலாம். டீ குடிக்கலாம்" என்றார்கள். எனக்குத் தலை சுற்றியது. ஒரு மாதம் முழுவதுமே ஏதோ இரண்டொருவர் தவிர வேறு யாரும் அந்த மலைமீது ஏறிச் செல்வதில்லை. அந்த வழியில் யாரை நம்பி எந்தப் பைத்தியக்காரன் டீக்கடை வைததிருப்பான் என்று நான் நினைத்தாலும் சுவாமி களிடம் எடுத்துச் சொல்லும் துணிவு எனக்கு இல்லை. ஆனாலும் சுவாமிகள் நான் கொண்டு வந்த உணவை வண்டி யிலேயே வைத்துவிடுமாறு பணித்தார் கள். வேறு வழியில்லாமல் அரைமனத் துடன் வண்டியிலேயே உணவை வைத்து விட்டு இருவரும் மலையேறினோம். பாதி வழி சென்றதும் ஓர் அதிசயக் காட்சி, என்னென்று சொல்வது! பாண், ரொட்டி, பலகாரங்கள் இவை அனைத்தும் வைக்கப் பட்டிருக்கும் ஒரு டீக் கடை அங்கே இருந்தது. "பார்த்தாயா மகனே வேண்டு மானதைச் சாப்பிட்டு விட்டு மேலே போகலாம்" என்றார். அந்தச் சித்த புருஷர். இருவரும் உண்டுவிட்டு மேலே சென்றோம். மீண்டுவரும் பொழுதும் அதே டீக் கடையில் மறுமுறையும் சாப்பிட்டுவிட்டு டீ குடித்துவிட்டுக் கீழே வந்துவிட்டோம். இதுவரையில் இல்லாத பெட்டிக்கடை அங்கே எப்படி வந்திருக்கும்? அவ்வளவு பலகாரங்கள் அங்கிருந்தும் எங்களைத் தவிர வேறு யாரும் அங்கில்லையே. அக்கடைக்காரன் யாரை நம்பி இவ்வளவு பலகாரங்களையும் கடையையும் வைத்தி ருக்கிறான் என்ற எண்ணம் என் மனத்தை உலுப்பிக் கொண்டிருந்தது. சுவாமிகள் சிரித்துக் கொண்டே "மகனே, இந்த இடியப்பத்தையும் சொதியையும் சுமந்து செல்ல வேண்டிய வேலையே இல்லாமல் போய்விட்டது பார்த்தாயா?" என்றார்கள். சுவாமிகளைக் கொண்டுபோய் யாழ்ப் பாணத்தில் விட்டுவிட்டு கொழும்பு மீண்ட எனக்கு மனதில் அமைதி ஏற்படவில்லை. இரண்டு நாட்கள் கழித்து உற்ற நண்பர் ஒருவரை அழைத்துக்கொண்டு சிவனொளி பாதம் போய்ச் சேர்ந்தேன். நண்பரிடம் இதைப்பற்றி ஒன்றும் நான் சொல்ல வில்லை.

டீக் கடை இருந்த இடத்தின் அடை யாளம் நன்கு தெரிந்து வைத்திருந்தேன். அப்படி ஒரு கடை அங்கிருந்த சுவடுகூடத் தெரியவில்லை. நான் சுற்றுமுற்றும் பார்ப்பதைப் பார்த்த நண்பர் "என்ன பார்க்கிறீர்கள்?" என்று சொல்லிக் கேட்டார்." இங்கு ஒரு டீக் கடை இருந்த தாக ஞாபகம். அதனால்தான் அது எங்கே போய்விட்டது என்று தேடுகிறேன்" என்றேன். நண்பர் சிரித்துவிட்டு "இந்த இடத்தில் டீக்கடையா? முழுப்பைத்திய மாக இருந்தால்கூட இந்த இடத்தில் டீக்கடையைத் தேடமாட்டாய். மனித நடமாட்டமே இல்லாத இந்த இடத்தில்

எந்தப் பைத்தியக்காரன் டீக்கடை வைப்பான்? வா போகலாம்" என்று அழைத்துப் போனார். அந்த நண்பரிடம் நடந்தது எதனையும் நான் சொல்ல வில்லை. காரணம், அதனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அவருக்கில்லை என்பதே. நான் அறிந்திருந்ததால் அவரிடம் ஒன்றும் கூறவில்லை. அ.ச.ஐயா, மகானின் திருவருளுக்குத் தாங்கள் பாத்திரமானது போல நானும் பாத்திரமாயினேன்" என்று கூறி மெய் சிலிர்த்தார்.

அன்று இரவு கொழும்பில் பேசும் பொழுது இந்த நிகழ்ச்சியைச் சொல் லாமல் திருப்பைஞ்ஞீலியில் நாவரசர் பெருமானுக்கு இறைவன் கட்டமுது அளித்ததையும், சுந்தரர்க்கு அவ்வாறே அளித்ததையும் கூறிவிட்டு "இதில் வியப் பொன்றுமில்லை. "விச்சது இன்றியே விளைவு செய்குவான்" ஆகிய இறைவன் திருவிளையாடலில இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. இதுபோன்ற நிகழ்ச்சிகளை அனாயாசமாகச் செய்துகாட்டும் மகான்கள் – சித்தர்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள். நல்வினை உடையவர்கள் அவர்களைக் கண்டு ஆசிபெற முடியும்" என்று கூறி முடித்தேன்.

அருளாளர்கள் என்பவர்கள் எப்போதும், எல்லா இடங்களிலும் இருந்துகொண்டு இறைவன் கட்டளைகளை இனங்கண்டு கொள்வதும், காண்பதும் வெளிப்படுத்து வதுமாயுள்ளார்கள். அவர்களுடைய அரு ளாசிகளைப் பெறுவது பல பிறப்புக்களிலும் நாம் செய்த புண்ணியத்தின் பயனே ஆகும். "கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்" என்று முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தாயுமானவப் பெருந்தகை கூறியதை 1955இலும் செய்துகாட்டும் அருளாளர்கள் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவே இப்பெருமகனாருடைய வாழ்வில் அவர் நிகழ்த்திய நான்கு அற்புதங்களை மேலே கூறியுள்ளேன். அப்பெருமானின் அருளாசி அனைவருக்கும் கிட்டவேண்டும் என்று அவருடைய திருவடிகளை வேண்டி அமைகின்றேன்.

எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்
ஏக மனேகமாய் நின்றார் போலும்
கல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்
காமனையுங் காலனையுங காய்ந்தார் போலும்
சொல்லாலே சும்மாவிருக்க வைத்தார் போலும்
சுருதிமுத லாகமங்கள் காணார் போலும்
எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்
என்னிதயம் நீங்காத விறைவர் தாமே.

– நற்சிந்தனை

ஸ்ரீமத் யோகசுவாமிகளும் மகாதேவ ஆஸ்ரமும்

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

கடந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தில் இரண்டு அற்புதமான குருமரபுகள் வளர்ந்து சைவநெறி, தொண்டுநெறி என்பவற்றைக் கட்டிக் காத்து நின்றன. அவையாவன, வேதாந்த ஞானவடிவமாக எழுந்தருளி பக்தி மார்க்கத்தையும் பேணிய ஸ்ரீமத் ஞானானந்தகிரி சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட சார்ஸன் சுவாமி என்பவர் அமைத்த சிவகுருநாத பீடம். இது கந்தர்மடத்தில் அமைந்துள்ளது. மற்றது நல்லூர்ச் சூழலில் எவ்வித அடையாளமும் இல்லாமல் தோன்றி வளர்ந்த கடையிற் சுவாமிகளின் சீட பரம்பரை. இது சைவசித்தாந்த அறிவினூடு மெய்ப்பொருளை அடையும் நெறி வளர்த்தது.

வேதாந்த மடம் என்று அழைக்கப்படும் சிவகுருநாதபீடத்தின் மூன்றாவது தலை முறையாக எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்.

அதே காலத்தில் கடையிற் சுவாமிகளின் மூன்றாவது பரம்பரையில் ஞானகுருவாக நல்லூர்ச் சூழலில் செல்லப்பா சுவாமிகளிடம் தீட்சை பெற்று, கொழும்புத்துறையில் அமர்ந்திருந்தவர் ஸ்ரீமத் யோகசுவாமிகள்.

அந்தக் காலத்தில் இணுவிற்பதியில் நடமாடிய பெரிய சந்நியாசியார் என்ற மகானின் ஆசியால் சாதாரண கமக்காரர் கந்தர் என்பாருக்கு ஆறாவது பிள்ளை யாகத் தோன்றிச் சிறுவனாக இருந்தவர் எங்கள் குருநாதர். கிளிநொச்சி – ஜெயந்திநகர் மகாதேவ ஆஸ்ரமத்தைத் தாபித்து ஞானப்பயிர் வளர்த்தவர்.

ஐந்து பெண்பிள்ளைகள் பெற்று, ஆறாவது குழந்தை வயிற்றில் இருக்கும் போது, இதுவும் பெண்ணாய்த்தான் பிறக்கும். அதைப் பெறுவதை விடப் பேய் அடிச்சுச் சாவது நல்லது" என்ற எண் ணத்துடன் கந்தரின் மனைவியார் காரைக் கால் சுடுகாட்டுப்பக்கம் நடந்து கொண்டி ருந்தாராம். எதிரே வந்த பெரிய சந்நியாசியார், தம் கரத்தில் இருந்த பிரம்பினால் வயிற்றில் லேசாகத் தட்டி, "உந்த வயித்துக்குள்ள வடிவேலன் வந்தி ருக்கிறான். கவலைப்படாமல் சந்தோச மாகப் பெத்து வளர்த்துவிடு. வீட்டுக்குப் போ!" என்றாராம். அம்மையார் வீடு திரும்பினார். உரிய காலத்தில் பிறந்த புத்திரனுக்கு வடிவேலன் என்றே பெயர் சூட்டினர்.

எழுந்து நடக்கப் பழகிய காலத்தி லேயே சிறுவனுக்குக் குலதெய்வமாகிய பரமானந்தவல்லி சந்நிதியே தஞ்சமா யிற்று. கந்தசுவாமி ஆலயம்தான் மேலதிக பொழுது போக்கிடமாய் இருந்தது.

விளைவேலி ஞானாசிரியர் பாட சாலையில் ஆரம்பக்கல்வி கற்கும் காலத்தில் தந்தையாருடன் கொழும்புத் துறை சுவாமியிடம் போகக் கிடைத்தது. பிறகுவிடுமுறைக் காலங்களில் தாமா

கவே கொழும்புத்துறை முனிவர் சந்நிதியை நாடிச் செல்லத் தொடங்கிவிட்டார்.

"வீட்டில நிக்கிறதெண்டா உடனே சுவாமிகிட்டே போகவேணுமாயிருக்கும். ரோட்டில போற மாட்டுவண்டிலோ எதுவோ – கிடைச்சதில ஏறி நடந்து போய்ச் சுவாமிக்கு முன்னால நிண்டாத்தான் மனசு அடங்கும். சும்மா பாத்துக் கொண்டி ருப்பன். அவரும் பாக்காத மாதிரி பார்ப்பார்.... நேரமானா, "ஓடும் பிள்ளாய் வீட்டுக்கு!" எண்டு துரத்துவார்' – வந்திடுவன்".

இப்படிச் சில காலத்தின்பின் ஒருநாள், "சும்மா என்னை ஏன் பாத்துக் கொண்டி ருக்கிறீர்? போய் மகாதேவன்கிட்டே நல்லாப் படியும்! ஓடும்!" என்று கலைச்சு விட்டார். வேதாந்த மடத்துக்குப் போனன்! (மகாதேவ) சுவாமி," ஆ வந்துவிட்டீரா? வாரும்! வாரும்!" என்று கூப்பிட்டுப் பக்கத்திலே அமர்த்திவிட்டார்.

இத்னபின் சிறுவன் வடிவேலன் கந்தர் மடம் வேதாந்த மடத்தில் ஒழுங்காக வேதாந்த பாடம் கேட்டான். உபநிட தங்கள், கைவல்யநவநீதம், பகவத்கீதை, நாரத பக்தி சூத்திரம் போன்ற ஏராள மான பாடபோதனை முறையாக நடந்தது. மகாதேவ சுவாமிக்குப் பிறகு வடிவேலர் தான் என்று உறுதிப்படும் அளவு மடத்தின் சகல காரியங்களிலும் பயிற்சி பெற்றார். அக்காலத்தில் தகப்பனார் சிவபதம் அடைந்தார். ஆச்சி (தாய்) "நீ தான் எனக்குக் கொள்ளி வைக்க வேணும்" என்று கேட்டுக் கொண்டார். அதனால் வடிவேலர் குருவிடமிருந்து பெறும் சந்நியாச தீட்சையை வாக்கினால் மட்டும் பெற்றுக் கொண்டார். பெரிய கட்டுக்குடு மியுடன், இடுப்பிலிருந்து முழங்கால்வரை ஒரு வேட்டித் துண்டுடன், ஆச்சியின் வேண்டுதலுக்கிணங்கிக் கமத்தைச் செய்ய ஆரம்பித்தார். இடைக்கிடை யோக சுவாமியிடம் செல்லத் தவறமாட்டார். இந்தப் பிரம்மச்சாரியிடம் யோக சுவாமிகள் பேரன்பு வைத்திருந்தார். "வடிவேலன் ரொம்பப் பெரியவன்! அவன்தானடா சரியான வேதாந்தி!" என்று அடிக்கடி கூறுவார்.

இதை விளக்க ஒரு சம்பவம்,

1980களில் கொழும்புத்துறையில் திருமதி. ரத்தினா நவரத்தினம், அவரது தம்பியார் திரு.துரைரட்ணம் ஆகியோ ருடைய வார்த்தைகளில் இந்த சுவாமிமார் இருவர் பற்றிய அரிய தகவல்கள் வருவ துண்டு. திரு.துரைரட்ணம் ஒரு கருப்புநிற கார் வைத்திருந்தார். அந்தக் காரில்தான் சுவாமி பயணம் செய்வார். துரைரட்ணம் நல்ல கறுப்பு நிறம். காரும் கறுப்பு. சுவாமி வேடிக்கையாக கரியா! என்றுதான் கூப்பிடுவார். ஒரு நாள் 1925ம் ஆண்டு, ஒரு செவ்வாய்க்கிழமை (திகதி 23 அல்லது 25) கார் கீரிமலைக்குச் செல்கிறது. துரைரட்ணம் சாரத்தியம் செய்கிறார். சுவாமி பின் ஆசனத்தில் சுன்னாகச் சந்தை அப்போது வெட்ட வெளியில்தான் நடந்தது. பல்லப்ப வயிரவர் கோயிலுக்கு எதிர்ப்புறம் ஒரு கத்தரிக்காய் விற்கும் ஆச்சியிடம் பேரம் பேசியபடி குனிந்து நின்று பிஞ்சுக் கத்தரிக்காய் பொறுக்கு கிறார் வடிவேல் சுவாமி. அப்போ அருகில் யோகசுவாமி மெள்ள நடந்துபோய் குனிந்து நின்ற வடிவேலரின் முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்தார். "ஆரது! என்று திடுக்கிட்டுக் கூவியபடி நிமிர்ந்த வடி வேலர், சுவாமியைக கண்டு நடுங்கி,

மெய்சிலிர்த்து" சுவாமி!" என்று கைகுவித்து அழத் தொடங்கிவிட்டார்.

"என்னங்காணும்! நல்ல பிஞ்சுக் கத்த ரிக்காயாகப் பாத்து வாங்கிக் கொண்டு போம்! ஆச்சி காத்துக் கொண்டிருப்பா!.... ம் சரி... சரி...." என்றவாறு சுவாமி வந்து காரில் ஏறிப் "போவம் கரியா!" என, கார் நகர்ந்து போகத் தொடங்கிவிட்டது. கும்பிட்டபடி வடிவேலர் நீண்ட நேரம் சிலைபோல நின்றதைத் துரைரட்ணம பார்த்துப் பார்த்துக் காரைச் செலுத்தினார்.

"இவர் பெரிய வேதாந்தி என்பிகள் சுவாமி. அடிபட்டதும் துடிச்சுப் பதைச்சு 'ஆரடா'! என்று கேட்கிறார். உடம்பு நான் என்ற நினைப்பு இருக்கிறபடியாலை தானே அவர் துடிச்சுப் பதைச்சவர்!" என்று கேலியாகக் கேட்டார் துரைரட்ணம். சுவாமி எதுவுமே பேசவில்லை. வேற பிராக்குப் பாக்கிற மதிரி இருந்திட்டார்.

பிறகு ஒருநாள் "கீரிமலைக்குக் காரில போகணும் கரியா வா" என்றார். ஏற்றிக் கொண்டு வரும்போது இணுவிலில் காரைக்கால் சிவன்கோயில் பக்கமிருந்து வந்து ரோட்டைக் கடந்து மற்றப் பக்கமாய்ப் போய்க் கொண்டிருக்கிறார் வடிவேலர். தலையில ஒரு பெரிய தலைப்பாகை, தோளில மண்வெட்டி, இடுப்பில இருந்து முழங்கால்வரை துண்டு வேட்டி. "கரியா! சத்தமில்லாம பக்கத்தில போ" என்கிறார் சுவாமி. கார் சத்தமில்லாமல் வடிவேலரைத் தொடர்ந்து பக்கத்தில் போக, சுவாமி எட்டிக் கையை நீட்டி வடிவேலரின் இடுப்புத் துண்டப் பற்றி இழுக்கிறார். துண்டு கையோடு வந்துவிட்டது. ஆனால், வடி வேலர் எந்தவிதச் சலனமுமிலலாமல் நேர் கொண்ட பார்வையுடன் தம்பாட்டுக்கு நடந்து போய்விட்டார்.

சுவாமி துரைரட்ணத்தாரைப் பார்த்துக் கடகடவெனச் சிரித்தார். "கரியா! நீ வெறும் பன்னாடை! என்றார்.

அதன்பிறகு பன்னாடை என்றே கூப்பிடத் தொடங்கிவிட்டார்.

தனது அறியாமையை எண்ணித் துரைரட்ணம் சுவாமியிடம் மன்னிப்புக் கேட்டாலும் சுவாமி சிரிப்பார்.

மகாதேவ சுவாமி மகா சமாதி அடையும்வேளையில் வடிவேலர் கதிர்காமத்தில் நின்றார். சிவகுருநாத பீடத்தின் தலைமை கனகரத்தினம் சுவாமிக்கு வழங்கப்பட்டது.

வடிவேலர் தமது குலதெய்வம் பரமானந்தவல்லி ஆலயத்துடன் ஒரு பர்ணசாலை அமைத்துப் பணிபுரியத் தொடங்கினார். இணுவில், அளவெட்டி போன்ற இடங்களில் உள்ள சைவப் பாடசாலைகளில் பண்ணிசைப் பாடம் நடத்தினார். சுவாமிகள் நல்ல குரல் வளம் படைத்தவர். கருத்து ஆழமான கதாப் பிரசங்கங்கள் செய்வார். தமிழகத்தி லிருந்து ஆன்மீகப் பெரியவர்களை வரவழைத்து அவர்களைக் கொண்டும் கோயில்களில் அருள் உரைகள் வழங்க ஏற்பாடுகள் செய்வார். அதேசமயம் யோகர் சுவாமிகளிடம் செல்வதையும் மறக்கமாட்டார்.

ஒரு முறை "தாம் இன்றும் பல பெரிய பணிகள் செய்யவேண்டும்" என்ற எண்

ணத்துடன் இருந்தபோது சுவாமியைக் காணச் சென்றார்.

"இஞ்சேரும்! அங்க கிளிநொச்சிப் பக்கம் ஒரே ஊத்தைப் புலமா இருக்குது காணும்! நீர்தான் அங்க போய் நல்லா வெளுக்கிற கட்டாடி வேலையைப் பாருமன்!" என்றார் யோகர். கும்பிட்டபடி விடைபெற்ற வடிவேலர் உடனடியாகவே கிளிநொச்சிக்குப் புறப்பட்டார்.

குடியேற்றத் திட்டங்கள், இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் என அப்போது கிளிநொச்சிப் பிரதேசக் காடுகள் குடியிருப்புக்களாக மாறிக் கொண்டிருந்த காலம் அது. சிறு சிறு குற்றம் செய்து பிடிபடுவோர் நாடு கடத்தும் தண்டனையாக கிளிநொச்சியில் குடியேற அனுப்பப்பட்டனர்.

படித்த வாலிபர்கள், யுவதிகள் அரச காணி வழங்கப்பட்டு அங்கே குடியேறத் தொடங்கினர். தமக்கு நல்லது சொல்லித் தர மனதுக்கு ஆறுதல் தர யாராவது வரவெண்டுமென அவர்கள் எதிர் பார்த்தனர். அவ்வேளையில்தான் இளம் துறவியான வடிவேல் சுவாமிகள் கிளி நொச்சிக்குச் சென்றார். ஆசிரியர் கனக நாயகம், வைத்தியர் அம்பலவாணர் என்போர் (வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வர்கள்) சுவாமியின் வரவை வரப்பிர சாதமாகக் கொண்டாடினர். குடியேற்றத் திட்டங்களில் சிறு சிறு ஆலயங்கள் எழுந்தன. பகவத்கீதை உரைகள் இடம் பெற்றன. இருண்ட வீட்டில் விளக்கேற்றி வைத்ததுபோல, 'மலேரியாக்காடு' என வருணிக்கப்பட்ட கிளிநொச்சிப் பிரதேசம் மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. க.நல்லதம்பி என்ற ஒரு நல்ல தொண்டர் முயற்சியால் ஒரு ஏக்கர் நிலம் ஜெயந்தி நகர் மத்தியில் பெறப்பட்டது.

ஓம் என்று எழுதிய ஒரு திரைச் சீலையே மூலஸ்தானமாக அமைந்த சிறு கொட்டிலில் வடிவேலர் என்ற வேதாந்த சிங்கம் குடியேறியது.

படிப்படியாக வளர்த்து தமது மானஸ குருவான யோக சுவாமிகளின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, தீட்சா குருவான மகாதேவ சுவாமிகளின் திருப் பெயரால் ஸ்ரீ மகாதேவ ஆஸ்ரமத்தைக் கட்டி எழுப்பினார் வடிவேற் சுவாமிகள்!

சுவாமிகளுடைய பணிகள் பரந்து விரிந்து இன்று பயன்தரும் நிலையில் எல்லோருக்கும் இந்த ஞான தீபங்களின் ஒளி நல் வழியையும் வாழ்வையும் அருளி நிற்கவேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்

மூலமும் பொழிப்புரையும்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

2. கடவுள் வாழ்த்து

வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

பரம்பொருளை எண்ணாத பிரமதேவருடைய உச்சியந் தலையினை நகத்தினால் கிள்ளி எடுத்தும், ஏனைய தேவர்களுடைய இரத்தத்தையும் ஆணவத்தினையும் அகழ்ந்து வாங்கியும் ஏற்ற தண்டனையைத் தந்தருளும வைரவக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பொன்னடிகளைப் பணிவோம். (9)

வேறு

வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடு
மஞ்செனப் புகையென யால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

கடுங்கோபத்தை உடைய வடவாமுகாக்கினியின் மேற் போர்த்திடும் கரும்புகைப் படலத்தைப் போலவும் நஞ்சைப் போலவும் சிவந்த ஒளி பொருந்திய திருமேனியின் மேல் அணியப்பெற்ற பெரிய கருநிறச் சட்டையை உடைய வைரவக் கடவுளுடைய பொற்பாதங்களைப் போற்றுவாம். (10)

வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

வந்து அவிப்பாகத்தை அருந்திய தேவர்கள் எல்லோரும் முடிவெய்தவும் முனிவர்களும் தேவர்களும் தமது நிலை என்னவாகுமோ என்று நிலைகுலைய பெரும் யாகம் சீர்கெடவும் தக்கனைத் தண்டித்த வீரபத்திரக் கடவுளுடைய பாதங்களைப் பணிவோமாக. (11)

சுப்பிரமணியக் கடவுள்

இருப்பரங் குறைத்திரு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

இரும்பினால் இயற்றப்பட்டு அரத்தினால் ராவப்பட்ட கூரார்ந்த வேற்படை வேடுவர்கள் உணரும்படி மகளாகிய வள்ளிநாயகி மேற்கொண்ட காதலை அழிக்கின்ற போரிடத்தில் எல்லோர்க்கும் விளங்கும் வண்ணம் காட்டி அருளிய திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி இருக்கின்ற செவ்வேட் பெருமானைச் சேவிப்போமாக. (12)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
டீரலை வாயிரு மெஃக மேந்திய
வேரலை வாய்தரு வெள்ளிவெற் பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்

சூரபன்மனை ஆழியினிடமாக அழித்து அவனுடைய மார்பைக் கிழித்து ஈரலை வாய்க்கொள்ளும் எஃகம் ஏந்திய பிரம்புகளுஞ் சிங்கங்களும் நிறைந்த கைலாச மலையை நீங்கித் திருச் செந்தூரினிடமாக எழுந்தருளி வந்து தங்கிய குமாரக் கடவுளைக் கொண்டாடுவோமாக. (13)

காவினன் குழலுறு காமர் பொன்னகர்
மேவினன் குழவரு விளியச் சூர்முதல்
பூவினன் குழலையம் பொருட்டு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவோம்.

ஐந்து தருச் சோலையுடைய இந்திரன் ஆகாயத்தில் அமைந்த அழகிய சுவர்க்கம் புகுந்து குடியேறவும் சூரபன்மன் இறக்கவும் பிரமதேவர் பிரணவப் பொருள் உணராது மயங்கவும் திருவேகரகத்தில் எழுந்தருளிய அறுமுகன் அடிகளை ஆராதிப்போம். (14)

நீரகத் தேதனை நினையு மன்பினார்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.

நல்ல மனத்தில் தம்மைத் தியானிக்கும் அடியார் பேருலகங்களில் சுழன்று திரியும் பிறவியைப் போக்குகின்ற பிரணவத்தின் வடிவமாக இருக்கிற தலைமையை எய்திய திருவேரகம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஆறுமுகப் பெருமான் அடித்தாமரையில் அன்பு வைப்போமாக. (15)

ஒன்றுதொ றாடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ றாடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்.

ஆன்மாக்கள் ஒடுங்குந் தோறும் பஞ்சகிருத்தியத் திருவிளையாட்டை நீங்கியும் அவ்வான்மாக்கள் உடம்புகள் தோறும் பொருந்த ஆற்றுஞ் செய்கையில் நின்றும் பஞ்ச சபைகளில் திருநடனம் இயற்றும் அருள் வள்ளலாகிய சிவபெருமான் விரும்புமாறு மலைகள் தோறும் திருவிளையாடலைச் செய்யும் முருகக் கடவுளை வணங்குவோமாக. (16)

எழமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

வளர்ந்த அழகிய தினைப்புனத்திலிருந்த தலைவியாகிய வள்ளிநாயகியார்க்கு முன்னாக தமது வயோதிபப் பருவம் இளமை இன்பத்தைப் பெறும் பொருட்டு அண்ணாவானவர் யானையாக வருதலை விரும்பிய பழமுதிர்சோலைத் தலத்தில் எழுந்தருளிய பகவானைப் பற்றிப் பணிவோமாக. (17)

ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

உலகம் அழியுங் காலத்திலும் அழிவின்றி சமானமற்ற வளமிக்க காஞ்சியில் புலவர்களாற் புகழப்படுகின்ற சிறப்புமிக்க குமரகோட்டம் என்னும் திருக்கோவிலில் வீற்றிருந்தருளுகின்ற பெருமை மிக்க ஆறு முகங்களுடைய ஆறுமுகப் பிரானுடைய அடிகளை ஆராதிப்போமாக. (18)

திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

பத்துப் புராணங்களைச் சிவபெருமானுக்கு ஓதியும் செப்பமாகிய வேதங்களை உணர்ந்திருந்தும் கூட மாயையால் மயங்கிப் பொய்ச் சபதத்தைப் போற்றிய வியாச முனிவர் தூக்கிய கையைத் தம்பனஞ் செய்த திருநந்தி தேவரது பாதார விந்தங்களைப் பணிவோமாக. (19)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
குண்டை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடுந்
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

முன்னூழினால் பாயை உடுக்கையாகக் கொண்ட சமணரை வெற்றி கொண்டு மதுராபுரியில் வீற்றிருந்து வெள்ளியவீபூதி ஒளியை விளங்கப் பரப்பிய முத்தமிழ் விரகர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருப்பாதங்களை என்றும் நெஞ்சில் நிறுத்துவோமாக. (20)

திருநாவுக்கரசு நாயனார்

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படுந்
துய்யசொ லரசர்தா டொழுது போற்றுவாம்.

பொய்ம் மொழிகளையுடைய நூல்கள் சிலவற்றைக் கூறும் கொடிய சமணர்கள் கட்டிக் கடலில் இட்ட கல் தோணியாக மிதப்பக் கரையடைந்த செம்மை நலம் அறிந்த திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடித் தாமரைகளைச் சிரமேற் சூடி வணங்குவோமாக. (21)

சுந்தரமூர்த்தி நாயனார்

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
ணுறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

வற்றிய தடாகம் நீர் முற்றியதாக முதலை முன்தோன்ற அந்த முதலை உண்ட பாலன் முன்வரவும் – இடைக்கால வளர்ச்சி தடைப்படா திருக்கவும் தேவாரத் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய சேவடிகளைச் சேவிப்போமாக.
(22)

மாணிக்க வாசக சுவாமிகள்

கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

உயிர் பஞ்சகந்தங்களுடன் கணந்தோறும் மாற்றமடையும் என்று நினைக்கும் புத்த மதத்தவர்கள் நிலைகுலைய பிறப்பில் பேசா மடந்தையைப் பேசுவித்துச் சாயுச்சிய பதம் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளை வணங்குவாம். (23)

திருத்தொண்டர்கள்

அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்ணவா
யெண்டகு சிவனடி யெய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

தேவர்களும் பிரமதேவரும் பிறரெல்லாம் காணுதற்கரிய காட்சியைத் தம்மிடத்துடைய சிவபெருமான் திருவடிகளைக் கலந்த சிவனடியார்களுடைய பாத தாமரையைப் பற்றிப் பணிவாம். (24)

சரசுவதி

தாவறு முலகெலாந் தந்த நான்முக
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

குற்றமற்ற உலகங்களை எல்லாம் படைத்த பிரம தேவருடைய பத்தினியாய் நெருங்கிய பலவகைப்பட்ட உயிர்களின் நாவுகள் தோறும் நடமாடுகின்ற நன்மை நிறைந்த சரசுவதி தேவியினுடைய தாமரை மலர் போன்ற பாதங்களைச் சிரமேற் கொண்டு சிந்தனை செய்வோம். (25)

கடவுள் வாழ்த்து முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 30

யோக சுவாமிகளின் கடிதம்

பகைத்தலும் விரும்புதலும் இல்லாதவன் சந்நியாசியாயினுஞ் சரி, அவனே பரமபுருடன். அதாவது அவன் சீவன்முத்தனென்று பெரியோர் சொல்லுகிறார்கள். இயற்கையொடு அளவளாவி வாழுதல்தான் பேரின்பம். அது ஒரு மாதிரியல்ல. உண்மை உணர்ச்சி. தனக்குத் தான் உண்மையாகவிருந்தால் யாவும் விளங்கும். தன்னைப்போல் மற்றவர்களையும நேசித்தலே 'தவம்'. அதுவே அறம்.

எஞ்சுஞ் சிவம்

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தின் சிற்பி

அமரர்

சிவகடாட்சக் குருக்கள் கணேசலிங்கக் குருக்கள்

சு. ஏழூர்நாயகம், முன்னாள் மாணவன்
பாலர் ஞானோதய சபை.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம் –
(பெரிய புராணம்)

பங்குனித் திங்கள் 5ம் நாள் 2014-03-19 புதன்கிழமை தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகப் பெருமானுக்கு புனரா வர்த்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அறுபது ஆண்டுகளாக காசி விநயாகர் ஆலயம், பாலர் ஞானோதய சபை ஆகியவை சார்ந்த இரண்டு பணிகளிலும் தம்மை அர்ப்பணித்து மறைந்த அமரர் சிவகடாட்சக் குருக்கள் கணேசலிங்கக் குருக்கள் ஐயா அவர்களை நினைவுகூர்தல் சாலப் பொருத்தமாகும்.

அமரர் சிவகடாட்சக் குருக்கள் – செல்வநாயகி அம்மையார் தம்பதிகளின் தவப்புதல்வனாக 14-06-1928இல் கணேச லிங்க சர்மா பிறந்தார். ஆரம்பக் கல்வியை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியா சாலையிலும், மகாஜனாக் கல்லூரியிலும் கற்று, புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோன்மணி சி.கணேசையர் அவர்களிடம் தமிழ், சமஸ்கிருதம் என்பவற்றைக் கற்று பாலபண்டிதரானார்.

சிறு வயதிலேயே தாயை இழந்து தந்தையாருடனே வாழ்ந்து வந்தார். ஆலயக் கிரியைகளிலும், 1946இல் தந்தை யாரால் தாபிக்கப்பட்ட பாலர் ஞானோதய சபையின் மாணவர்களை வழிநடாத்தி நல்லாசிரியராகவும் செயற்பட்டார். நயினை சிவஸ்ரீ ஐ.கயிலாயநாதக் குருக்கள் அவர்களால் ஆசாரிய அபிடேகம் செய்யப் பெற்று குருவாக விளங்கினார்.

காசி விநாயகராலயப் பணிகள்

குருக்கள் அவர்களின் தந்தையார் சிவகடாட்சக் குருக்கள் 1970-12-14இல் அமரரானார். அன்று தொட்டு அவர் விட்டுச் சென்ற பணிகள் இரண்டையும் செவ்வனே வெகு சிறப்பாகத் தாம் சிவப்பேறு அடையும்வரை செய்து வந்தார்.

காசி விநாயகராலயத்தை புனரமைத்து கும்பாபிடேகம் செய்வதுடன் மகோற்சவம் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன் வாழ்ந்து மறைந்த சிவகடாட்சக் குருக்கள் அவர்களின் ஆத்மா திருப்தியடையும் ஆலயப் புனருத்தாரணப் பணிகளை நிறைவேற்றி தமது தீட்சா குருவான நயினை கயிலாயநாதக் குருக்களைக் கொண்டுவித்து 15-09-1971இல் காசி விநாயகருக்கு கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிகழ்த்தினார்.

தந்தையார் சேகரித்து வைத்திருந்த கொடிமரம், கவசங்களின் உதவியுடன் கொடிமரத்தை தாபித்து 19-04-1973இல் முதன் முதலாக தமது தீட்சா குருவைக் கொண்டு கொடி ஏற்றுவித்து தந்தை யாரின் கனவை நனவாக்கினார். 1975 முதல் 19-07-2001இல் தமது தர்மபத்தினி இறைபதம் அடையும்வரை காசி விநா யகரின் மகோற்சவத்தை 25 ஆண்டுகள் வெகு சிறப்பாக நிகழ்த்தினார். 03-06-1987இல் பஞ்சமுக விநாயகரைப் பிரதிட்டை செய்து தாமே கும்பாபிடேகம் செய்து மகிழ்ந்தார்.

1995இல் ஏற்பட்ட இடப்பெயர்வை அடுத்து மீண்டும் தெல்லிப்பழைக்கு வந்தபோது ஆலயத்தின் நிலை கண்டு வருந்தி கும்பாபிடேகம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். பாலாலயம் அமைத்து ஆலயப் புனருத்தாரணப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றி 09-02-2000இல் காசி விநாயகருக்கு சிறப்பான முறையில் கும்பாபிடேகம் செய்தார். 2001இல் சித்தி புத்தி சமேத விநாயகரை பிரதிட்டை செய்து 29வது மகோற்சவத்திலிருந்து மகோற்சவத்தின் றிறைவாக விநாயகருக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற வழிஅமைத்தார்.

காசி விநாயகர் சித்திரத்தேரில் பவனி வரவேண்டுமென விரும்பி சித்திரத் தேரொன்றை நிர்மாணித்து 21.04.2003இல் வெள்ளோட்டம் நிகழ்த்தி 31வது ஆண்டு மகோற்சவத்திலிருந்து பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரில் எழுந்தருளி வருவதைக் கண்டு மன மகிழ்ந்தார்.

இடம்பெயர்ந்து மருதனார்மடத்தில் வசித்துவந்தபோதும் தினமும்ஒருவரின் உதவியுடன் ஆலயத்திற்கு வந்து ஆலயப் பணிகளை மேற்கொண்டு வந்தார். இறுதிக் காலத்தில் ஆலயப் பொறுப்புக்களை தற்போதைய பிரதம குருவாக விளங்கும் சிவஸ்ரீ. சு. தியாகராசாக் குருக்களிடம் ஒப்படைத்தார்.

பாலர் ஞானோதய சபைப் பணிகள்

7-02-1946இல் தந்தையாரால் தாபிக்கப்பட்ட இச்சபையின் செயற்பாடுகளை அவருக்கு அனுசரணையாக இருந்து சமய வகுப்புகள், சமயபாடப் பரீட்சை, சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி வந்தார். தந்தையாரின் மறைவிற்குப் பின்னர் சபையின் தலையாய பொறுப்பை ஏற்று சபையைத் திறம்பட வழிநடாத்தி வந்தார். சமயம் சார்ந்த செயற்பாடுகளுடன் நின்று விடாது எம்மவரின் கலை, கலாசார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இசை, வயலின், மிருதங்கம் முதலிய பயிற்சி வகுப்புக்களுக்குத் தகுந்த ஆசிரியரை நியமித்து இலவசமாக இவ்வகுப்புக்களை நடாத்தினார். பல இடர்கள் மத்தியிலும் சபை நிறுவப்பட்ட நாளாகிய பெரவரி 7ம் திகதியில் சபையின் ஆண்டு விழாவை தவறாது நடாத்தி வந்தார்.

1972இல் சபையின் 25ஆவது ஆண்டு விழா வெள்ளி விழா மலராக வெளியிடப்பட்டு சிறப்படையச் செய்த பெருமைக்குரியவரானார்.

1992இல் இடம்பெயர்ந்து மருதனார் மடத்தில் வாழ்ந்தபோதும் சபையின் சமய பாட வகுப்புக்களை தான் தங்கியிருந்த வீட்டிற்கருகிலுள்ள ஆலயத்தில் சமய பாட வகுப்புக்கள், இசை நடன வகுப்புக்களை

உடுவிலிலும் நடைபெற ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

1995இல் ஏற்பட்ட இடம்பெயர்வின் போது மீசாலையில் வசித்துவந்த காலத்தில் 7-2-1996இல் மீசாலை இலுவம் செல்வ விநாயகர் ஆலயத்தில் சபையின் 49வது ஆண்டு விழாவை நடத்தினார்.

1997இல் சபையின் பொன்விழா நிகழ்வுகளை இணுவில்பதியில் சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்களின் கண்ணகை அம்மன் ஆலயத்தில் பொன்விழா மலரை வெளியிட்டு சிறப்பித்தார். 2006இல் சபையின் அறுபதாண்டு நிறைவை யொட்டி சிறப்பான ஆண்டுவிழாவை மணிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டு சிறப்பித்தார்.

நூல் வெளியீட்டுப்பணி

குருக்கள் அவர்கள் சிறந்த தமிழறி வுடையவர். பல்வேறு நூல்களை ஆக்கும் திறமை கொண்டிருந்தார். குறிப்பாக இளம் மாணவர் சந்ததிக்கு ஏற்ற வகையில் எளிய வசன நடையிலும், வினாவிடை போன்றவற்றையும் நாவலர் முறையைப் பின்பற்றி வெளியிட்டார். திருவாத வூரடிகள் வரலாற்றுச் சுருக்கம், பெரிய புராண வசனச் சுருக்கம், திருத்தொண்டர் புராணம், வினாவிடை சந்தான குரவர் வரலாற்றுச் சுருக்கம், திருவிளையாடற் புராணவசனச் சுருக்கம், சைவ சமய பொது அறிவு என்பன மாணவர் களுக்காக குருக்கள் எழுதி வெளியிட்ட நூல்களுள் சிலவாகும். இவை தவிர கணபதி கடாட்சம், விநாயகபுராண வசனச் சுருக்கம், திருவாதவூரடிகள் புராணம், பத்துக் கட்டுரைகள் என்பன இவரது எழுத்துருவாக்கத்தில் முகிழ்த்த ஏனைய நூல்களிற் சிலவாகும்.

1936ம் ஆண்டு வித்துவான் சிவானந் தையர் அவர்களால் இயற்றப்பட்டு காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் அரங் கேற்றப்பட்ட புலியூர்ப் புராணம் எனும் நூலை குருக்களவர்கள் 2004இல் மறுமதிப்புச் செய்துள்ளார்கள். காசி விநாயகராலய வளர்ச்சிக்கும் பாலர் ஞானோதய சபையின் அபிவிருத்திக்கும் தன்னையே அர்ப்பணித்திருந்த குருக்கள் 16-02-2007இல் காசி விநாயகரின் கழலடியை அடைந்தார்.

குருக்கள் அவர்களின் வாழ்க்கையை நாம் நோக்குமிடத்து, அந்தணராக, சிவாச்சாரியராக, சமயப் பிரசாரகராக விளங்கி அந்தணர் குலத்தில் தனித்துவ மாக மிளிர்ந்தார் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் காசி விநாயகருக்கு குட முழுக்கு நடைபெற்ற இந்த வேளையில் கோயில் என்பது தனித்து பூசை வழிபாடு களுக்கு மாத்திரம் உரியதன்று என்பதை உணர்ந்து மக்களை சமய, கலை, கலாசார முள்ளவர்களாக வளர்த்து எடுக்க வேண்டும் என்று உயர்ந்த நோக்குடன் வாழ்ந்து அதனைச் செயற்படுத்தி மறைந்த அமரர் கணேசலிங்கக் குருக்களை நன்றியுடன் நினைவு கூருவோம். அவர் திருவடிகளை மனத்தால் பணிவோம்.

'பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்'

நனறி : சி. கணேசலிங்க குருக்கள்
நினைவு மலர

சிறுவர் விருந்து

ஆளும் தகுதி

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து! எப்படி இருக்கிறீர்கள்? முதல் தவணைப் பரீட்சை நெருங்குகிறது. நன்றாகப் படியுங்கள். இன்று பழைய ராஜாக்கதை ஒன்று கேளுங்கள்!

ஒரு பெரிய சக்கரவர்த்தி இருந்தார். அவருக்கு மூன்று மனைவியர். மூவருக்கும் மூன்று புதல்வர்கள். மூன்று இளவரசர்களும் மிக நல்லபடி கல்வி, அரசியல், போர்க் கலைகள், நிர்வாகம் போன்ற பல துறையிலும் ஒரு நல்ல குருகுலத்தில் பயிற்சி பெற்று வந்தனர். கல்வித் தேர்ச்சிபெற்று வந்த மூன்று மகன்களிடத்தும் அரசர் மிக அன்பு கொண்டிருந்தார். தனது நாட்டின் எல்லைப் புறங்களில் மூன்று பிரிவுகளை ஏற்படுத்தி, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை மூவரிடம் ஒப்படைத்தார். அவர்களும் மிகச் சிறந்த முறையில் தமக்கு உரிய பகுதியையும், அங்குள்ள மக்களையும் பாதுகாத்து வந்தனர். காலம் செல்ல, அரசர் முதுமையடைந்தார். தமது பெரிய ராஜ்ஜியப் பொறுப்பைத் தகுதியுள்ள ஒரு மகானிடத்தில் ஒப்படைத்துவிட்டுத், தாம் ஓய்வெடுக்க விரும்பினார்.

மூன்று மகன்களுமே நல்ல தகுதி பெற்றவர்கள். அறிவு, வீரம், ஆற்றல் எல்லாம் நிறைந்தவர்கள். அவர்களில் யாரிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதில் அரசர் தீர்மானிக்கச் சிரமப்பட்டார். மந்திரிமாருடன் ஆலோசித்து, ஒரு நாள் குருகுலத்துக்குப் போனார். தமது மகன்களுக்கு நல்லறிவு புகட்டிய குருவைக்கண்டு வணங்கினார். அவரிடம் தனது மனநிலையை விளக்கினார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட குரு சொன்னார்.

"கவலையை விடுங்கள் மகாராஜா. சரியான அரசரைத் தேர்ந்தெடுக்க நாம் முயற்சிப்போம். நல்ல முடிவை நீங்கள் விரைவில் அறிவீர்கள். அமைதியுடன் அரண்மனைக்குச் செல்லுங்கள்" என்றதைக் கேட்டு அரசரும் திரும்பிச் சென்றார்.

மூன்று இளவரசர்களுக்கும் குரு ஒரு செய்தி அனுப்பினார். இளவரசர்களே!

எனக்கு மிகவும் தள்ளாமை ஏற்பட்டு விட்டது. அதனால் ஆஸ்ரமப் பொறுப்பை எனது வாரிசான மாணவனிடம் ஒப்படைத்துவிட்டு, யான் தவம் செய்யப் போகிறேன். இந்த நிகழ்வை ஒரு சிறு விழாவாகக் கொண்டாட ஆஸ்ரமக் குருகுலத்தில் ஏற்பாடு செய்கிறோம். அதற்கு நீங்கள் வரவேண்டும்.

வரும்போது; மிகச்சிறந்த வாகனத்தில் வரவேண்டும்; மிகச் சிறந்த ஆடை

அணிகள் உடுத்து வரவேண்டும்; மிகச் சிறந்த ஆசனத்தில் அமரவேண்டும்; மிகச் சிறந்த ஆயுதம் தரித்து வரவேண்டும். இந்த நான்கு செயற்பாடுகளில் சிறப்பானதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். இதன் அடிப்படையில் எதிர்கால அரச பதவி உரித்தாகும் என்று எழுதி, மூவருக்கும் தனித்தனியே அனுப்பிவைத்தார்.

குறித்த தினத்தில் அந்த ஆஸ்ரமச் சூழல் நன்கு எளிமையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பேரரசர், அரசிகள், பழைய மாணவர்கள், அவர்களின் உறவினர்களான பன்நாட்டு அரச பிரதானிகள், நாட்டு மக்கள், வனவாசிகள் யாவரும் கூடியிருந்தனர்.

ஆஸ்ரம மாணவர்கள் சுறுசுறுப்பாகத் தத்தம் கடமைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆஸ்ரம மண்டபத்தின் முன்னே ஒரு மான் தோல் ஆசனத்தில் குரு அமர்ந்திருந்தார். மூன்று இளவசரர்களின் வருகைக்காக அனைவரும் காத்திருந்தனர்.

மிக அழகிய தேர் ஒன்று வந்தது. தங்கக் கவசம் இட்ட, பவளக்கால்கள் கொண்ட, மிகச் சிறந்த நான்கு குதிரைகள் பூட்டிய பெரிய தேர்! மூத்த இளவரசன் அதிலிருந்து இறங்கிவந்து குருவையும், பெற்றோரையும் வணங்கினான். அவனது ஏவலாளர் ஒரு தங்கச் சிம்மாசனத்தைக் கொண்டுவந்து ஓரிடத்தில் வைத்தனர். அந்த இளவரசன் அந்தச் சிம்மாசனத்தில் கனகம்பீரமாக அமர்ந்து கொண்டான்.

அடுத்து நாட்டின் மிகச் சிறந்த மல்லர்கள் எண்மர் ஒரு தந்தப் பல்லக்கினைச் சுமந்து வந்தனர். அடுத்த இளவரசன் அதிலிருந்து இறங்கி அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு, உயரமான ஒரு ஆசனத்தில் போய் அமர்ந்துகொண்டான்.

மூன்றாவதாக வந்தான் அடுத்தவன். அவன் தன் தகப்பனார் பயன்படுத்தி, இப்போது முதுமை அடைந்திருந்த 'மாமதம்' என்ற பழைய பட்டத்து யானையின்மேல் ஏறி வந்தான். குருகுலத்திற்குச் சற்றுத் தூரத்திலேயே அதிலிருந்து இறங்கி, அந்த யானையின் காதில் ஏதோ சொன்னான். அந்த யானை மகிழ்ச்சியோடு அதனைக் கேட்டுக் கொண்டு காட்டின் ஒரு புறமாகப் போய் மூங்கில் இலைகளையும், உயர்ந்த மரங்களின் இலைகளையும் பறித்து உண்டு கொண்டு சுதந்திரமாகத் திரிந்தது.

இந்த மூன்றாவது இளவரசன் மிகப் பணிவுடன் வந்து பெற்றோரை வணங்கினான். பொது மக்களுக்கு மகிழ்வுடன் வணக்கம் தெரிவித்தான். தான் வரப் பிந்தியதற்காக மன்னிப்புக் கேட்டவாறே யோகியாரை வணங்கி, பர்ணசாலையின் ஒரு ஓரத்தில் மான் தோல் விரித்து அமர்ந்திருந்த யோகியாரின் காலடியில் சென்று வெறும் தரையில் அமர்ந்து கொண்டான்.

விழா தொடங்கியது. யோகியார் எழுந்தார். அரசர் மற்றும் அனைவரையும் ஆசிகள் கூறி வரவேற்றார். பின் பேசினார்.

"யான் எனது குருவின் ஆசியால், பேரசரின் உதவியால், மக்களுடைய

ஆதரவால் இந்தக் குருகுலத்தைப் பல்லாண்டுகளாகக் கவனித்து வந்தேன். இப்போது எனக்கு முதுமை வந்து விட்டது. எனது பொறுப்புக்களை எனது முதன் மாணவனாகிய ஞானசீலனிடம் ஒப்படைத்துவிட்டுத் தவம் செய்யப் போகிறேன்"

இப்படிக் கூறிய குரு தன் மாண வனை அழைத்து அனைவருக்கும் அறிமுகம் செய்தார். பின் அவனை அன்புடன் ஆசீர்வதித்துத், தனது கடமை களை ஏற்குமாறு கூற, அவனும் மிகுந்த பணிவுடன் குருவின் கட்டளையை ஏற்றான்.

பின் வந்திருந்த எல்லோருக்கும எளிமையான, சுவையும் சுத்தமும் நிறைந்த உணவு வழங்கப்பட்டது.

அனைவரும் உணவு உண்டபின், யோகி அனைவருக்கும் இப்படித் தெரிவித்தார்.

"பேரரசரே மதிவாணர்களே! நாட்டு மக்களே! காட்டில் வாழும் மக்களே! இப்போது எமது குருகுலம் புதிய தலைவரைப் பெற்றுள்ளது. இந்த நல்ல நாளிலே நமது தேசத்திற்கும் ஒரு தகுதியான தலைவரைத் தேர்ந்தெ டுக்கும் பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறோம். எனது இளவர சர்கள் மூவரில் உங்களுக்கு - உங்கள் தேசத்திற்கு உரிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்! இளவரசர்கள் மூவரும் தமது தகுதியை இப்போது உங்களுக்கு விபரிக்கட்டும்!" என்றவாறு இளவரசர்களைப் பார்த்தார் யோகியார்.

மூத்த இளவரசன் எழுந்தான். எனது வாகனம் மிகச்சிறந்த தேர். அதன் தூண்கள் பவளத்தால் ஆனவை. தங்கத் தகடு வேய்ந்தது இந்தத் தேர். மிகச் சிறந்த சிற்பிகள் உருவாக்கிய இநதத் தேர் நான்கு குதிரைகள் பூட்டியது. அந்தக் குதிரைகள் மிக உயர்ந்த ஜாதி அரபிக் குதிரைகள்.

எனது ஆடைகள் உயர்ந்த பட்டிலே மிக விலை உயர்ந்த வைரங்கள் பதித்து விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சீனத்துப் பட்டு ஆடைகள்.

எனது அணிகள் மாற்றுக் குறையாத பசும் பொன்னில் மிகச் சிறந்த வைரங்கள் பதித்து விசேடமாகத் தயாரிக்கப்பட்டவை.

இதோ! எனது வாள்! தங்கத்தால் செய்து, வைரங்கள் பதிக்கப்பட்டது. எனது ஆசனம் தங்க சிம்மாசனம்!" என்று கூறி அமர்ந்தான்.

இரண்டாமவன் எழுந்தான்.

எல்லோரையும் பார்த்தான். எனது வாகனம் மிகச் சிறந்த யானைத் தந்தங் களால் செய்யப்பட்டு, தமிழ்நாட்டு முத்துக்களும் வைரங்களும் அழகு செய்ய மிக வல்லவர்களான நான்கு மல்லர்களால் சுமக்கப்படுவது.

எனது ஆடை அணிகள் மிக உயர்ந்த நேர்த்தியான பட்டினாலும், மணிகளாலும் இழைக்கப்பட்டவை. மிகச் சிறந்த நவமணிகள் பதித்த ஆப ரணங்கள் யான் அணிந்துள்ளவை.

இங்கே இருப்பவற்றில் மிக உயர்ந்த ஆசனத்தினை நான் தெரிவு செய்துள்ளேன்.

எனது வாள் மிக வேலைப்பாடுகளுடன் தங்கத்தினால் செய்யப்பட்டது.

மூன்றாமவன் மிகுந்த பணிவுடன் அனைவருக்கும் வணக்கம் கூறினான்.

எனது உடை ஒரு போர்வீரன் அணிவது. இதுவே எனக்கு, 'யான் மக்களின் பாதுகாவலன், நாட்டின் பாதுகாவலன்' என்ற எண்ணத்தை ஊட்டிக்கொண்டு இருப்பது. எந்த வேளையும், எந்த வேலையும் செய்ய உதவியானது.

எனது வாகனம் என் தந்தைக்குப் பல போர்களில் வெற்றி ஈட்டித்தந்து புகழ் பெற்று, இன்று முதுமையுற்று நிற்கும் பட்டத்து யானை மாமதம். யாருடைய கட்டளைக்கும் அடிபணியாது அது. சிறுவயது முதல் என்னோடு பழகிய தால் என்னைச் சுமக்க இசைவது எனது ஆயுதம் ஒரு போர்வீரனிடம் இருக்க வேண்டிய வலிமையான போர் வாள மட்டுமே. எனது ஆசனம் எனது குருவின் திருவடி. அருகில் அமரக் கிடைப்பதே யான் இந்த மண்ணிலே பிறந்தேன். மண்ணிலே வளர்ந்தேன்; மண்ணிலேயே நடமாடுகிறேன். எனவே; மண் மாதா என் தாய். இந்த மண்ணில் உட்காரும்போது என் அன்னை மடியில் இருப்பது போன்ற அமைதி எனக்குக் கிடைக்கிறது. இதுவே யான் விரும்பும் ஆசனம்.

எங்கும் மௌனம் நிலவியது. சிறிது நேரம். குரு கேட்டார் – "நாட்டு மக்களே! யாரை நீங்கள் உங்கள் அரசனாகத் தெரிவ செய்கிறீர்கள்?" எல்லோரு டைய குரலும் ஒரே மாதிரி ஒலித்தது – "மூன்றாவது இளவரசரே எங்கள் மன்னராக முடிசூட வேண்டும்! அவர் வாழ்க!.

சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு

கலாநிதி ஆறு. திருமுருகன்
021 : 222 6550

கண் வைத்திய நிபுணர்
Dr. ச. குகதாசன்
021 : 222 3645

யோக சுவாமிகளின் திருத்தோற்றம்





ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929